REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 2¼
ஆறுமாத சந்தா ...	ரூ. 1¼

தனிப்பிரதி முக்காலணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-26 ‖ கும்பகோணம் விக்ரம-ஷு மார்கழி-மீ 26உ 1941- ஷு ஜனவரி-மீ 9உ ‖ லெ- 2

வாரக்குறிப்புகள்

(ஸ்ரீவே. ஸோ. சர்மா)

இத்துணை நாளா? பிரும்மஸ்ரீ ம. அ. சின்னசாமி சாஸ்திரிகளவர்களுக்கு இவ்வாண்டு மஹாமஹோபாத்யாய பட்டம் வந்ததாக சில பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது! பல்லாண்டுகட்கு முன்னமே இவருக்கு இது கிடைத்திருக்கவேண்டும்!! அவரது யோக்யதையை உணர்ந்தவரனைவரும் இதை ஆமோதிக்காமலிரார்!!

காதில் ஏராதோ? பண்டயராஜ ஆக்ஷியில் எவரேனும் [illegible] ராஜா அதை [illegible] நல்லதாயின் ஏற்பார்! தற்கால அரசாங்கத்திற்கு காது சிறிது மத்யமம் போலும்!! ராவ்சாகிப் ராவ்பகதூர் திவான் பகதூர் போல், உபாத்யாய, மஹோபாத்யாய, மஹாமஹோபாத்யாய என பண்டிதர்கட்கு பட்டமளித்தல் நலமென முன் கூறினேம்!

ஆங்கில புது ஆண்டு!! பிறந்தது! யுத்தமும் முடியவில்லை! காந்திஜி ஸத்யாக்ரஹத்தை கிருஸ்துமஸ்ஸுக்காக நிறுத்தினார்? அசல் கிருஸ்து மதத்தினர் கொலைகளத்தை நிறுத்தவில்லை. போப்பாண்டவன் பிஷப்புகள் நமது மத பரிபாலன ஸபை கடவுளை வணங்கும்படி கூறினர். அதுவும் நடந்தது. என்ன?

மீனாக்ஷிக்கு ஆங்கிலர் உபயம்!! மதுரை ஸ்ரீ மீனாக்ஷியின் பெருமையை உணர்ந்த சுத்த வெள்ளையர் நீலகிரியில், அம்பாள் ஒரு தின உத்ஸவத்திற்காக மான்யம் விட்டு அதை நடத்துகிறார்! சென்னை கவர்னருக்கு கும்பாபிஷேகம் செய்விக்க மனம்வரவில்லை. நற்காலத்தில் நற்புத்தி பிறக்கும்.

ஓர்மாதின் தர்மம் !! மதுரைமா நகரிலே பிருஹச்சரண வகுப்பைச்சார்ந்த ஓர் பிராமண மாது குழந்தைஸ்வாமி முதலிய ஸத்ஸங்கத்தால் தத்வ மறிந்து தனது வீட்டை தேவாலயமாகக் கட்டி சுத்தமான விபூதியைத் தன் கையால் செய்து ஸ்ரீ சுந்தரேசருக்கும் பழனிபகவானுக்கு மளித்து வந்தாள். அசுத்தமான பின் அதை நிறுத்தி விட்டாள் த்வாதசி பிராமண போஜனம் முதலிய தர்மங்களை செய்யும் போது கண்ணால் காணும் பாக்யம் கிடைத்தது.

திண்டுக்கல் வேத வித்யாசாலை !! நமது முடி சூடாமன்னர் ஸ்ரீ நடேசய்யர் ஜமீனியராயிருந்த மகா-ா-ா-ஸ்ரீ விச்வநாதய்யரவர்கள் B. A. B. L. (சாந்தாச்ரமி ஸ்வாமிகளின் பேரர்) வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தையும் மாணவர்களுக்கு ஓர் வேத வகுப்பையும் நடத்துகிறார். சென்ற வாரம் ஸ்ரீ ஸோமதேவ சர்மாவைக் கொண்டு ஸ்வதர்மமும் ப்ராணாக்நிஹோத்ரமும் என்ற உபன்யாஸம் நடத்தினர்

கீதாப்ரபாவம் !! விழுப்புரம் தெய்வநெறி கழகத்தினாதரவில் சென்ற புதனிரவு 8-மணிக்கு ஸ்ரீ ஸோமதேவ சர்மா ஓர் உபன்யாஸம் செய்தார்.

ஸந்தேஹ விளக்கம் !! கீதாஸாரமும் பாத்ம கதைகளும் என்ற ஷை ஸபை நூல் வெளியானதில் கீதாநுஷ்டாநம் என்பதில் [illegible] பட்டியில் ஒவ்வொருநாளும் அவ்வளவு ஜபம் செய்யவேண்டுமா எனபலர் கேட்கின்றனர். அத்தனை நாளுக்குள் அவ்வளவு ஜபம் ஆகவேண்டுமாதலால் ஒரு நாளைக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஜபிக்கவும் ஸங்க்யை நிகத்தால் வகுத்து அதன்படி செய்வது உசிதம்.

மதுரைமஹாசபை

பொறுக்குமணி!

பால மீனாம்பிகை ஆலய லக்ஷார்ச்சனை உபன்யாஸத்தில் பண்டிதமணிகள் உதிர்த்ததில் சிலகுறிப்பிடுவோம்:—

"காந்திஜி வெள்ளைப்பாதிரிகளின் கையாள். அவர் சொல் மத விஷயத்தில் ஏற்கத் தக்க தல்ல."

ஸ்ரீஅக்நிஹோத்ரம் தாதாசார்ஸ்வாமிகள்.

* * *

"ஸ்வராஜ்யத்தை விரும்பும் காங்க்ரஸ் மந்திரி டாக்டர் ராஜன் ஆயுர்வேதத்தை ஆழத் தோண்டி புதைத்தார்."

பாம்பே டாக்டர் பரஞ்சபே!

* * *

வைத்ய விஷயத்தில் பனகல் செய்ததை கூட காங்கரஸ் மந்திரி செய்யவில்லை.

ஸ்ரீ நடேசய்யர்.

* * *

சட்டம் படித்தவரே நீதிஸ்தலத்திலே பேசலாம், வைத்யரே சிகித்ஸை செய்ய வேண்டும், ஆனால் வேதம் ஆகமம் அறியாதவர் ஆலய அதிகாரிகளாக வேண்டும்! 16 கேள்விகளுக்கும் பதிலறிந்தவரே ஆலய அதிகாரியாக வரல் வேண்டும். மற்றவரை நியமிப்பது கண் கேட்பதும் காது பார்ப்பதும் போலாம்!

ஸ்ரீவத்ஸ. ஸோமதேவ சர்மா!

* * *

அதர்ம ஸபைகள் விழுந்து மாளவே மதுரையில் கூடுகின்றன போலும்!

ஸ்ரீ N. R. கிருஷ்ணஸ்வாமிய்யங்கார் B. L.

* * *

ஜாதி கர்மாவால்தான் ஸித்திக்கிறதென விக்ஞாந சாஸ்திரமும் கூறுகிறது! தலைவர்.

ஸ்ரீ நடேசய்யர்.

* * *

தலைவரை நினை மநமே, நியாயந்தானோ நீர் சொல்லும், ஓ நாஸ்திகரே! என்ற இருபாட்டுகளும் மதுரை மாதர் [illegible] றுப்படி பாடியவள் ஸ்ரீமதி செல்லம்மாள்.

* * *

மீனாம்பிகை பாபிகளால் அசுத்தப் படுத்தப்பட்டதைக் கண்டு வயிரெறிந்து வெளியில் வந்தோம்! மாதர் ஸபை துவக்கினோம்! நமக்கு அரும்பெரும் விஷயங்களை அளிக்கும் ஒரே பத்ரிகையாகிய ஆர்யதர்மத்திற்கு சந்தாதாரராக சேர்ந்து நித்ய பத்ரிகையாக்குங்கள் சந்தா குறைக்கப்பட்டுள்ளது.

ஏ. எஸ். மீனாக்ஷிஅம்மாள்

* * *

நாம் குல தர்மத்தை விடாமல் புருஷர்களையும் தார்மிகராக்கலாம். தலைவர் நடத்தும் ஸநாதந தர்ம கலாசாலையில் படிக்க யான் குழந்தையாயில்லையே என வருந்துகிறேன்.

ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி N.R.K. புதல்வி

(வெ. ஸோ.)

கும்பகோணம் பாங்கு, லிமிடெட் கும்பகோணம்.

ஷை பாங்கின் 31—12—40 முடிய நிகரலாபம் (ஆடிட்டர்கள் பரிசோதனைக்கு உள்பட்டு) ரூ 27,160-5-11. அதற்கு முந்திய வருஷத்தின் கணக்கில் பாக்கியிருந்த தொகை ரூ 1,468—7—11 உடன் கூடுதல் ரூ 28,628-13-10ல் 1940-ஷு முதல் பாதி வருஷத்துக்கு 6% வீதம் ரூ 8,477—4—0 இண்டரீம் டிவிடெண்டு (வருமானவரி நீங்கலாக) ஏற்கனவே கொடுத்திருப்பது போக பாக்கி ரூ 20,151—9—10 பங்குக்காரர்களுக்கு விநியோகத்திற்கு அருகமாய் இருக்கிறது.

Kumbakonam. 6—1—41. } S. MAHALINGA AIYAR, B. A., B. L., *Managing Director.*

வர்ணாச்ரம சுயராஜ்ய ஸங்கத்தைபலப்படுத்துக

அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத் தலைவர் ராவ்சாஹேப் என். நடேசய்யரவர்கள் 19–11–40ல் ஹிந்து மஹா சபையினருக்கு வெளியிட்ட பஹிரங்க கடிதத்தில், ஹிந்து மத கோட்பாடுகளில் ஹிந்து மஹா சபை தலையிடாது, அரசியலில் கவனத்தைச் செலுத்தி வருமென்று உறுதி கூறுமேயானால் ஸநாதனிகளின் ஒத்துழைப்பு அதற்குக் கிடைக்குமென கூறினதற்கு திருப்திகரமான பதில் இல்லை. ஆனால் மதுரையில் 1940 டிஸம்பர் 28, 29, 30உ களில் நடைபெற்ற ஹிந்து மஹாசபை மஹா நாட்டில் நிறைவேறின எட்டாவது தீர்மானம் "சமூகம், மதம், மற்றும் எல்லா பொதுக்காரியங்களிலும் தீண்டாதார்களுக்கு சமஉரிமை அளிக்க மஹாசபை உழைக்க வேண்டும்" எனக் கூறுகின்றது.

ஸநாதனதர்ம ஆண்டு நிறைவு விழாக்களில் பலவற்றில் தலைமை தாங்கி வந்தவரும் 'தர்மராஜ்யா' என்னும் ஸநாதனதர்ம பத்திரிகையின் மாஜி ஆசிரியராக இருந்தவருமான நம்மதிப்பிற்குரிய திவான்பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தைக் கண்டனம் செய்து வந்தவர், ஹிந்துமஹா சபை மதுரை மஹா நாட்டில் தனது வரவேற்புரையில் "ஹிந்து மஹா சபை ஜாதியை அழிக்க விரும்பவில்லை. மகாத்மா காந்தியும் அவ்விதம் செய்ய முன்வரவில்லை. தீண்டாதார் என்போர் அவர்ணர்கள் என்று சொல்வதற்கில்லை. படிப்படியாக சுத்தி முறைகளைச் செய்து தீண்டாதார்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை வழங்கவேண்டும்" என [illegible]

காந்திஜீயின் புதல்வர் தேவதாஸ் காந்திக்கும்(வைச்யர்), ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் புதல்விக்கும் (பிராமணப்பெண்), நடைபெற்ற விவாஹம் வேதமுறைப்படி நடந்ததென்றும் அஃது சாஸ்திர சம்மதமென்றும் காந்திஜீ கூறவில்லையா? மாணவர்கள் விதவைகளை மணக்க முன்வர வேண்டுமென்று முன் சென்னை பிரசங்கம் ஒன்றில் சொல்லவில்லையா? தீண்டாதார் ஆலயப்பிரவேசச் சட்டத்திற்கு ஆசிகூறவில்லையா? கலப்புமணம், கலப்பு உணவு அவச்யம் என வற்புறுத்தவில்லையா? இவைகளெல்லாம் ஜாதி முறையைப் பலப்படுத்துகின்றன போலும்? தீண்டாதார்கள் அவர்ணர்கள் அல்ல என்றால் 'சுவர்ணர்கள்' அவர்ணர்கள் யார்? ஜாதி பிறப்பினாலா? செய்கையாலா?

ஹிந்து மஹாசபையின் எட்டாவது தீர்மானம் தீண்டாமையை அறவே ஒழிக்க வேண்டும் (மதவிஷயத்திலுங்கூட) என திட்டமாகக் கூறிவிட்டதே. ஹிந்து மஹா சபை ஆர்ய சமாஜக் கொள்கைகளுக்கு ஆக்கமளித்து வருவதுதெரிந்ததுதான். ஹிந்துக்களின் ஐக்யபாவத்தை உண்டுபண்ண அரசியல் துறையில் பாடுபட விரும்பும் சபை முற்றிலும் வரம்பு மீறி மதத்துறையில் தலையிடலாமா?

விரிக்கிற்பெருகும். ஐயமற நிர்ணயமான விஷயத்தை மேன்மேலும் சர்ச்சை செய்து கொண்டிருப்பதில் பயனில்லை. 1937-ஹூ மதாரஸில் நடைபெற்ற பாரததேச பண்டித ரத்தினங்கள் பரிஷத்தில் வேதசாஸ்திர கோட்பாடுகளைச் சர்ச்சை செய்து தீண்டாமை, கலப்பு விவாஹம், விதவாவிவாஹம், ஜாதி முறைமை இன்னோரன்ன விஷயங்களில் நிர்ணயமான விவரம் ஸநாதனிகள் நன்குணர்ந்ததே. ஹிந்துக்களின் பலம் எண்ணிக்கையால் அதிகரிக்கும் என்ற

ராஜபுத்ர கதைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கோஹனின் ஸந்ததிகள் எட்டு தலைமுறைகள் எடுரிலே ஆண்டுவந்தனர். இவ்வாறு பில்லர்கள் நாட்டை அரசு புரிந்த கடைசி மன்னன் நாகாதித்யன். வேட்டையாடச் சென்றிருந்த அவனை பில்லர்கள் வளைத்துக் கொண்டு கொன்று விட்டதாகவும் இக்கலகத்தின் விளைவாக கோகிலர்கள் அந்நாடு துறந்ததாகவும் தெரிகிறது.

நாகாதித்யனது புதல்வன் பப்பா மூன்று வயதுக்குழந்தை. கமலாவதியின் மரபில் தோன்றிய ஓர் பிராம்மணனே குழந்தையைக் காப்பாற்ற முன் வந்தான் தூக்கிக் கொண்டு ஓடி பந்தேரிக் கோட்டையை அடைந்தான். பிறகு நிம்மதியாக வாழ எண்ணி அருகிலுள்ள த்ரிகூடமலையைச் சார்ந்த நாகேந்திர நகரத்துக்கு அனுப்பப்பட்டான் பப்பா.

நாகேந்திரத்தைச் சுற்றியுள்ள காடுகளில் திரிந்து வளர்ந்தான் பையன். புராதனக் கோயில்களும் பிராமண பூஜ்யர்களும் நிறைந்த நாடு. மலைச்சிகரங்களும் அருவி வீழ்ச்சிகளும் மனதை பரவசப்படுத்தி ஈச்வர ஸாந்நித்யத்தைப் புகட்டிற்று. பப்பா சைலாதீசனாகவே விளங்கினான்.

ஒரு சமயம் பசுக்களை ஓட்டிக்கொண்டு காடுகளில் மேய்த்துக்கொண்டிருந்த பப்பாவை அந்நாட்டு ராஜபுத்ர சோலங்கி தலைவன் புதல்வி கண்ணுற்றாள். அவளும் அவள் தோழிகளும் அங்கு விளையாட வந்தவர்கள். மரங்களில் பெரிய கயிறுகளைக் கட்டித் தொங்கவிட்டு ஊஞ்சல் ஆட வேணுமென்று விருப்பம் அவர்களுக்கு. கயிறு கைவசம் இல்லை. பப்பாவைக் கூப்பிட் [illegible] விளையாடினான். பப்பாவின் வஸ்திரமும் ராஜபுத்ர புதல்வியின் முந்தாணியும் முடியப்பட்டது. தோழிகள் சுற்றிவர ஓர் மாமரத்தைபிரதக்ஷணம் செய்தனர். விளையாட்டாக ஓர் மணம் முடிந்து விட்டது! அதன் விளைவாக பப்பா நாடு கடத்தப்பட்டான்.

ராஜபுத்ர தலைவன் தன் மகளுக்கு மணம் செய்விக்க வரனைத்தேடி நிச்சயித்தான். ஜாதகப் பொருத்தம் பார்க்க பிராம்மணரைத் தருவித்தான். ஜாதகத்தைப் பார்த்த அப்பிராம்மணர் 'பெண்ணுக்கு ஏற்கனவே மணமாகியிருப்பதாகத் தெரிகிறதே' என்றார். தலைவன் திகைத்தான். தீர விசாரித்தான். பப்பாவின் தோழர்கள் வாயைத் திறக்கவில்லை. ஆனால் பெண்கள் பேசாமல் இருப்பார்களா? விஷயத்தை அறிந்து கொண்டான் தலைவன். அதற்கு முன்பே தலைவனின் எண்ணத்தை பப்பா தன் தோழர்கள் மூலம் அறிந்து கொண்டு விட்டான். இரு ஸகாக்களுடன் ஓடினான் நூறு ராஜ வம்சங்களை ஸ்தாபிக்கப் போகும் பப்பா, சித்தூரில் ஆளும் அரசனின் மருமகனான பப்பா!

சிறிது காலம் காடுகளிலும் மலைகளிலும் வஸித்தான். அவனது வீரச் செயல்களும் தெய்வீக சக்திகளும் எங்கும் பரவின. பப்பாவின் தாயாரும் பராமரவம்சத்தைச் சேர்ந்தவள். சித்தூரை ஆண்டுவந்த அரசனும் பராமரவம்சத்தியவனே. ஆதலால் சித்தூருக்கு வரவேற்கப் பட்டான். ஸம்மானித்து ஓர் ஸாமந்தனாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டான். மற்ற தலைவர்களைக் காட்டிலும் அதிகமாகவே போற்றப்பட்டான் புகழப்பட்டான். இதைப்பொறுக்காத இதரத்தலைவர்கள் அரசனுக்கு கீழ்படிய மறுத்தனர். இவ்வேளையில் சிந்து நதியையும் கடந்து ஆஜ்மேரையும் வென்றுவிட்டு சித்தூரை தகர்க்கவே வந்து விட்டான் மஹமத்பின் காஸிம் எனும் காலீப் வாலீதின் சேனைத்தலைவன்.

(தொடரும்) K. V.

ஹிந்து மஹாசபையின் மனோபாவத்திற்கேற்ப வகுக்கப்பட்டுள்ள வைதிகமதபுறம்பான திட்டங்களுக்கு ஸநாதனிகள் ஒருக்காலும் இசையார். காங்கிரஸிலும் ஹிந்து மஹாசபையிலும் வைத்தமோஹம்போதும் "தன் கையே தனக்குதவி" என்றபடி தனித்து நின்று உறுதியுடன் வேதநெறியை அடிப்படையாகக் கொண்டுள்ள அகில இந்தியவர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தைப் பலப்படுத்துவதுதான் ஸநாதனிகளுக்கு ஒரே வழி. நமது சங்கம் சிறிதுகாலமாக பலம்பெற்று வருகிறது. அத்துடன் திருப்தி அடைவதற்கில்லை. நம்மிடையே தியாகசிந்தனை அதிகரிக்க வேண்டும். நிந்தனையை அறவே விடுத்து அன்புபூண்டு கட்டுப்பாடான முறையில் நாடெங்கும் பிரசாரம் செய்ய வேண்டும். தலைவர்கள் இது விஷயத்தில் கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுகிறேன். காலதாமதம் ஆகாது.

T. P. ஜகதீசய்யர் ஆத்தங்குடி.

வெ. ஸோ. சர்மாவின் விமர்சனம்

திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் எழுதுகிறார்:—

ஆர்யதர்மம் மார்கழி 19உ சஞ்சிகையில் வெ. ஸோ. சர்மா அவர்கள் என்னை ஹிந்து ஸபையில் குதித்து விட்டதாகவும், அதற்கு முன் எந்த கக்ஷியிலும் சேராமலிருந்ததாக [illegible] யில் லக்ஷார்ச்சனை சமயத்தில் வே. ஸோ. சர்மா உபன்யாஸம்செய்கையில் ப்ரஹ்மஸ்ரீ ராவ்ஸாஹிப் என். நடேசய்யர் வீட்டுக்கு டிஸம்பர் 25உ போனபொழுது வெ. ஸோ. சர்மா என்னை புகழ்ந்து பாராட்டிப் பேசினார். பிறகு அவர் எப்படியோ கோபமாக இருப்பது போல் தோன்றுகின்றது. நான் ஹிந்து மஹா சபையில் சேர்ந்து வெகு நாளாய் விட்டது. நான் புதிதாக குதித்தது ஒன்றுமில்லை. முன், ஒரு கக்ஷியிலும் நான் சேராமலிருந்ததாக அவர் சொல்வதும் சரியல்ல. ஸனாதனிகள் கக்ஷியில் தான் இருந்தேன், இருக்கின்றேன். வெ. ஸோ. சர்மா பிறந்ததுக்கு முன் முதலே அது என் நிலை. அனேக மத சபைகளில அவர் அறியவே நான் தலைமை வகித்துமிருக்கின்றேன். 1917 வருஷம் நடந்த ஸனாதனமகாநாட்டில் தலைவருரையில் கூட நான் தீண்டாதவர் உரிமைகளைப்பற்றி சொல்லியிருக்கின்றேன். 7 கோடி ஜனங்களை சண்டாளர் என்று ஒதுக்குவது பொருத்தமற்ற விஷயம் என்று அப்பொழுதும் இப்பொழுதும் என் எண்ணம். அவர்களுக்கு மத உணர்ச்சியைப் புகட்டி மந்திரோபதேசங்களால் அவர்களை தாழ்விலிருந்து உயர்வுக்கு கொண்டுவரக் கூடும், வரவேணும் என்று என் எண்ணம். அவர்கள் அவர்ணர்கள் அல்ல, ஸவர்ணர்கள் என்றே நினைக்கின்றேன். ஆனால் காங்கிரஸ் மந்த்ரிகள் செய்த கட்டாயச்சட்டம் தவறு. ஹிந்துக்கள் மனதை அறிந்து அவர்களுக்குள்ளாக பெரும்பான்மையோர் விருப்பப்படி தான் நடக்கவேணும். ஹிந்து மகா சபையின் கொள்கையும் இதுதான். அதில் ஸனாதனிகளும் இருக்கின்றார்கள். வெ. ஸோ. சர்மா கோபிக்கக்கூடாது. தத்வமறிந்து ஜனநாயகத்தின் தன்மையறிந்து நடப்பது தான் தர்மம்.

ஊற்றுக்காடு

கும்பகோணம் ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள் விஜயம்

4—1—41

நமது ஜில்லாவில் சிஷ்ய கோடிகளின் நன்மையின் பொருட்டும், சிஷ்டாசாரங்கள் செப்பமுறும் பொருட்டும் ஆங்காங்குக் கிராமங்களில் விஜயம் செய்து சதுபதேசம் செய்தருளிவரும் நமது பரமாசார்யார் அவர்கள் இந்தக்கிராமவாசிகள் செய்த தவப்பயனுக மெலட்டூரிலிருந்து நேரே இந்த ஊருக்கு விஜயம் செய்தார்கள். இந்தக்கிராமத்தார் பொருளாதார நிலையில் தமது முன்னைப் பெருமையை இழந்து நிற்பதை உணர்ந்து எவ்வாறு மஹாசந்நிதானத்தை வரவேற்று வழிபடுவதென்று மயங்கிநிற்கின்ற நிலையை உணர்ந்த சுவாமிகள் கிராமத்தாரை எதிர்பாராமலேயே அவர்களுக்குத் தர்சனம்தந்து தடுத்தாட்கொள்ள எண்ணிப் பரமகருணையுடன் எழுந்தருளிய திறத்தை அறிந்த கிராமத்தார் பெருந்திரளாகப்பூர்ணகும்பங்களுடன்வேத கோஷங்களுடன் எதிர்சென்று வரவேற்று அழைத்து வந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் முதலில் ஸ்ரீ காளிங்க நர்த்தனப்பெருமாள் கோவிலுக்குச் சென்று தர்சனம் செய்தார்கள். அப்பால் கிராமத்தார் வேண்டுகோட்படி சிவிகையில் அமரக் கிராம அந்தணர்கள் சிவிகை தாங்க வீதி வலம் வந்தார்கள். வீடுகள் தோறும் பூர்ண கும்பமும், தீபாராதனையும், காணிக்கையும் செலுத்தப்பட்டன. [illegible] மணிக்குச் சுவாமிகள் எழுந்தருளுவதற்கென அமைக்கப்பட்ட ஜாகையில் அமர்ந்தார்கள். அக்கால், கிராமத்தார்களின் சார்பாக, கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியராகிய இவ்வூர் வாசி ஸ்ரீ ஊ. சா. வேங்கடராமையரால் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டதுடன் கிராமத்தின் நிலைமையும், கிராமத்தார் நடந்துகொள்ளவேண்டிய கடமையும் விரித்துரைக்கப்பட்டன. கிராமத்தார் தங்களது நிலைமைக்குத் தக்கபடி பொன் வைக்குமிடத்தில் பூவைப்பதுபோல் தங்களுடைய ஆராதனையாகயிருக்கவேண்டித்தாங்கள் சேர்த்த உபகரணங்களைச்சந்நிதானத்தில் சமர்ப்பித்துக் கொண்டார்கள். ஸ்ரீ சுவாமிகள் வழக்கம்போல் பாமரர் மனமும் பரவசப்படும்படிபூஜைமுதலியவற்றை நிறைவேற்றியருளிப் பிரசாதங்களை வழங்கினுர்கள். இனிய முறையில் சந்தர்ப்பணை நடந்தது.இரவு 8மணிக்கு மேல் ஸ்ரீகைலாஸநாதர் ஆலயத்திற்கு விஜயம் செய்தார்கள். வெளியூரிலிருந்து வந்திருந்த பலருக்கும் கிராமத்தார்க்கும் உபதேசம் புரிந்தார்கள். இது தனியே ஒரு பத்தியில் வெளியாகியுள்ளது. பல ஊர்களுக்கு முத்திராதிகாரிகளை நியமித்தார்கள். ஊற்றுக்காட்டிற்கும் ஸ்ரீ வி. துரைசாமி ஐயரை முத்திராதிகாரியாக நியமித்தார்கள். உள்ளூர் சாஸ்திரிமார்களுக்குத் தனித்தனி பத்தாறு வேஷ்டிகளைச் சம்மானம் செய்தார்கள். எவ்வாறு முத்திராதிகாரிகளும் சாஸ்திரிகளும் நடந்துகொள்ளவேண்டும் என்பதைப்பற்றிவிளக்கி உரைத்தார்கள். எட்டு வயதிற்கு மேல் உபநயனமாகாத குழந்தைகள் இருக்கலாகாதென்றும், உபநயனமானவுடன் ஓராண்டு ஆங்கிலம் முதலிய கல்வி பயிலாது வைதிகக்கல்வியை ஸ்ரீ மடம் கட்டளையிடு முறையில் கற்பிக்கவேண்டும் என்றும், ஏகாதசிதோறும் வால்மீகி ராமாயண மூலத்தைப் படித்துத் தமிழ் வசனத்தை இருமுறை படிக்கவேண்டும் என்றும் கற்பித்தார்கள்.

வரவேற்பு

வணக்க விண்ணப்பம்

குடந்தையிற் காஞ்சி காம
   கோடிபீ டத்தின் கோவே
அடங்கியின் புறலே செய்ய
   லாவதென் றறையு மன்பே
மடந்தவிர்த் தடியே முய்ய
   வரமளித் துதவும் வாழ்வே
திடம்பெறற் குழல்கின் றேமைத்
   திருத்தியாண் டடுருளுந் தேவே.
சந்திர சேக ரேந்த்ர
   சரஸ்வதீ தவத்தின் மூர்த்தி
வந்தடி படிய வேண்டி
   வாழ்வுற வகையி லேம்பால்
வந்தனை யீன்றுண் மான
   வழிவழித் தொழும்ப ரேமைச்
சந்ததம் வாழ வாசி
   புரிந்தனை தடுத்தாட் கொண்டே.
இப்பெருங் கருணைக் கியாங்க
   ளென்கைம்மா றியற்ற வல்லேம்
ஒப்பிலா மணியே ஞானத்
   தீபமே யொருகா லத்தில்
ஒப்பிலா திருந்த வெங்க
   ளூரினி துயர்ந்து வாழத்
தப்பிலா நெறிதந் தாண்டாய்
   சங்கர பரம யோகி.
வந்தருள் புரிந்தாய் போற்றி
   வரிட்டநன் னிலையாய் போற்றி
இந்தவிப் பிறவித் துன்ப
   மினிவரா தருள்வாய் போற்றி
அந்தமில் சீர்த்தி நின்சே
   வடிமல ரளித்தாய் போற்றி
பந்தனை யிகந்தாய் போற்றி
   பரமனே போற்றி போற்றி.

(முதற் பத்தித் தொடர்ச்சி)

கடைசியாகக் கிராமத்தார் பொருள் இல்லாமையால் தக்கபடி உபசரிக்கமுடியாமைக்கு வருந்துகின்றதை உணர்ந்து "பணத்தால் தான் உபசாரம் என்பதில்லை. பணம் உங்களால் கிடைக்காவிட்டாலும் பிற்காலத்தில் உங்கள் சந்ததிகளால் மடத்திற்குக் கிடைக்கலாம். வேண்டியது மனிதர்களே. இந்த உபதேசப்படியும், அவ்வப்பொழுது மடத்தினர் தெரிவிக்கும் உத்தரவுப்படியும் நடந்து கொள்வதே சிறந்த உபசாரமாகும்" என்று கூறியருளிக் கிராமத்தார் எல்லாரையும் இன்பக்கடலில் மூழ்குவித்தார்கள். திருக்கருகாவூரிலிருந்து வந்திருந்த அன்பர்கள் வேண்டுகோளுக்கிணங்கி அங்கு விஜயம் செய்யலானுர்கள். கிராமத்தார்கள் தங்கள் கலி நீங்கிய தெனமகிழ்ந்து பேராவாரத்துடன் வழியனுப்பிப் பிரியா விடை பெற்றுக் கொண்டார்கள். இது இந்தக் கிராமத்திற்குச் சுவாமிகள் முப்பதாண்டுகளுக்குப் பின்னர்ச் செய்த இரண்டாது விஜயமாகும்.

(மூன்றாம்பத்தித் தொடர்ச்சி)

சிஷ்யர்களாகிய நீங்கள் உங்களுடைய கடமைகளைச் சரிவரச்செய்து வருவீர்களானுல் உங்களுடைய க்ஷேமத்தைப் பிரார்த்திக்க வேண்டிய நான் இந்த லௌகிக விவகாரங்களில்கவனம்செலுத்தாமல்என்னுடையதவத்துறையில் அதிகம் கவனம் செலுத்த இயலும்.நீங்கள் உங்களுடைய சுதர்மங்களில் குறைவின்றிச்செய்து வாழ்வதும், நான்தவம்புரிவதும் சேர்ந்துவிடுமாயின் நாடும், நாட்டுமக்களும் முன்னேற்றமடைந்து இம்மைமறுமை இன்பங்களை எய்தி மகிழ்வது நிச்சயம்.

கடமை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் செய்த மஹோபதேசம்

ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகள் ஊற்றுக்காடு கிராமத்தில் "கடமை" என்பது பற்றிச் செய்த மஹோபதேச சாரம்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய கடமைகளைச் சரியாகவும் தவறில்லாமலும் செய்யவேண்டும். மடத்திற்கும் ஒருவிதக் கடமையுண்டு. சிஷ்யர்களாகிய உங்களுக்கும் கடமையுண்டு. கிராமங்களில் பல கார்யங்களின் பொருட்டு மானியங்கள் விடப்பட்டுள்ளன. அந்த மானியங்கள் அந்தக் கிராமத்தின் பொதுக்காரியங்களான சிலவற்றைத் தங்கள் கடமையாகக் கொண்டு செய்யவேண்டியதற்காகச் சிலருக்கு விடப்பட்டுள்ளன. அந்த முறையில் பல கிராமங்களில் ஸ்ரீமடத்திற்கும் மானியம் விடப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்திலும் மானியம் இருக்கின்றது. ஸ்ரீமடத்திற்கு மானியமாக நிலத்தைக்கொடுத்துள்ள உங்கள் விஷயத்தில் மடத்திற்கு ஒரு கடமையுண்டு. மடத்து சிஷ்யர்களாகிய உங்களுக்கும் சில பொறுப்புக்கள் உண்டு. மற்ற மானியங்களைப் பெற்றிருப்பார்கள் உங்களுக்கு வேண்டிய சில வேலைகளைச்செய்வார்கள். மடத்திற்குரியவர்களாகிய நாங்கள் செய்யவேண்டிய கடமை வேறுவிதமானது. நீங்கள் கைக்கொண்டு நடந்து இன்புறத்தக்க பல வழிகளை உபதேசம் செய்யக் கடமைப்பட்டவர்கள் நாங்கள். நீங்கள் அவற்றை இயன்றவரையில் அநுஷ்டித்து நலம் பெறவேண்டியவர்கள். நீங்கள் ஒரே இடத்தில் இருப்பவர்கள். நாங்கள் பல இடங்களுக்கும் சென்று வரவேண்டும். நாட்டின் க்ஷேமத்திற்காகவும் மஹா ஜனங்களாகிய உங்களுடைய க்ஷேமத்திற்காகவும் நாங்கள் அப்பொழுதப்போது தெரிவிக்கும் செய்திகள் விரைவில் எல்லா இடங்களிலிருப்பவர்களுக்கும் தெரியவேண்டும். அதுபற்றியே தீர ஆராய்ந்து "முத்திராதிகாரிகள்" என்ற முறைஅமைக்கப்பட்டுள்ளது. மடத்திலிருந்து வரும் செய்திகளை எல்லாரிடத்திலும் பரப்பும்படி செய்யவேண்டியது அந்த முத்திராதிகாரிகளின் முதற்கடமையாகும். இங்கே சில இடங்களில் கட்சிகள் இருப்பதால் காரியங்கள் நடைபெறத் தடையிருப்பதாக கூறப்படுகிறது. கட்சிகள் இருப்பது நல்லது என்பது தான் எனது கருத்து. கட்சிகள் இருந்தால் அங்கேஇன்னும் சிலரேனும் பாபத்திற்கும் அகாரியங்களைச் செய்வதற்கும் பயப்படுகிறவர்கள் இருக்கிருர்கள் என்பது அறியப்படும். கட்சிகளே இல்லாவிட்டால் எல்லோரும் கட்டுப்பாட்டுடன் நல்லதையோ கெட்டதையோ செய்ய இடமேற்படும். இதனுல், கட்சிகளால் தீமை நேர்ந்து விடாது என்பது மாத்திரம் தெரிந்துகொள்ள வேண்டியது. எவ்வளவு கட்சி இருந்தாலும் அவை தர்ம காரியங்களிலும் ஸ்ரீ மடத்தின் காரியங்களிலும் பொது க்ஷேமமாகத் தெரிவிக்கப்படும் மடத்து உபதேச உத்தரவுகளைப் பின்பற்றுவதிலும் அபிப்பிராய பேதங்களையும் தடைகளையும் உண்டாக்கலாகாது. இந்த சமூகம் உயர்நிலையை அடையவேண்டுமானுல் தெய்வபக்தியுடன் பாபங்களுக்குப்பயந்து தரும காரியங்களை இயன்ற வரையில் செய்துவர வேண்டும். அவரவர்களுக்கு உரிய கர்மாநுஷ்டானங்களைச் செய்வதில் கவனம் செலுத்தவேண்டும். பணம் மாத்திரம் பெரிதாக மாட்டாது. சிறந்த மனிதர்கள் அகப்படுவது தான் அருமையானது. மடத்து

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்
விக்ரம- ௵ மார்கழி-௴ 26உ

ஸ்ரீஸவர்க்காரின் சிறந்த பிரஸங்கம்.

மதுரையில் நடைபெற்ற அகில பாரதீய ஹிந்து மஹாஸபைத் தலைவரான ஸ்ரீயுத ஸவர்க்காரின் பிரஸங்கம் ராஜீய அம்சங்களைப்பற்றிய மட்டில் 28 கோடி ஹிந்துக்களின் மனதை விசேஷமாக ஆகர்ஷிக்கக் கூடியதாக இருக்கிறது. புண்ணிய [illegible] இப்பாரத தேசத்தின் ஸொந்தக்காரர்களான ஹிந்துக்களுக்கு ஒரு சோதனை காலமிது. தங்கள் தேசத்திலேயே தங்கள் உரிமைக்கும், க்ஷேமத்திற்கும் அவர்கள் போராட வேண்டியிருக்கிறது. இச்சமயத்தில் தேசத்தின் பிரதான ராஜீய ஸபையாக விளங்கிவரும் காங்கிரஸ், ஹிந்து ஸமுதாயத்தின் பிரத்யேக க்ஷேம விஷயத்தில் மிகுந்த உதாஸீனம் வஹிப்பதுடன் நில்லாமல், ஸமயம் நேரும் போது அற்ப விஷயங்களுக்காகக் கூட அன்னியர் நட்பைப்பெறக்கருதி ஹிந்துக்களின் முக்கிய உரிமைகளைக்கூட பலியிடத் துணிந்து நிற்கிறது. அதன் பகட்டு பிரசாரத்தில் ஹிந்துக்கள் மயங்கி வழி தவறிப் போய் விட்ட காரணமாக, தங்கள் பாத்யங்களையே இழந்து விடக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டனர். ஆதலால், ஹிந்து ஸமுதாயரக்ஷணம் என்ற ஒரே ஒரு தீவ்ர நோக்கத்துடன் ராஜீயத் திட்டமொன்று நமது ஸமூஹத்திற்கு மிக அவச்யமாயிருப்பதை ஹிந்து ஸமூஹமேதாவிகள் சிந்தித்து வருகிறார்கள்.

அத்தகைய ராஜீய திட்டத்தை ஸ்ரீ ஸவர்க்கார் தமது பிரஸங்கத்தில் வெகு தெளிவாக வெளியிட்டிருக்கிறார். ஹிந்து ஸமுதாயரக்ஷணமென்ற முக்ய நோக்கமொன்றுதான் ஸ்ரீ ஸவர்க்கார் முன்னிலையில் நிற்கிறது. அதைத் தவிர வேறு எதையும் அவர் சிந்திப்பதில்லை. அதனால் அவர் தெளிவாயும், உறுதியாயும், கபடமன்றியும் பிறர் தாக்ஷிண்யத்திற்கு அஞ்சாமலும் தமது திட்டத்தைச் சொல்லுகிறார். ஹிந்துஸ்தானம் ஹிந்துக்களுக்குச் சொந்தமானதென்றும், இங்கு அன்னியர்களுக்கு எவ்வித பாத்யமுமில்லையென்றும், அந்நியர்கள் இங்கு நமக்கு கீழ்ப்படிந்து ஒத்துழைத்து வாழ்வதில் ஆக்ஷேபமில்லையென்றும், இல்லையேல் அவர்கள் இத்தேசத்தை விட்டுப் போய் விடுவதே மரியாதையென்றும் வீர ஸவக்காரைவிட வேறு எந்த தீர புருஷன் தான்கூறத்துணிவார்? இவ்வாறு கள்ளம் கபடமின்றி பேசுவதால் தான் ஜனாப்ஜின்னா கூட ஸ்ரீஸவர்க்காரிடம் மிகுந்த மரியாதை காட்டுவதாகச் சொல்லுகிறார்.

ஸ்ரீ ஸவர்க்கார் தமது பிரஸங்கத்தில் வெகு முக்கியமான பற்பல விஷயங்களைப் பற்றியும் பிரஸ்தாபித்து நிர்ணயம் கூறியிருக்கிறார். ஹிந்து சமுதாயத்தைக் கெட்ட வழியில் இழுத்துச்செல்லும் இயக்கங்களை அவர் பலமாகக்கண்டித்து, ஹிந்துக்களின் ஆத்மநாசகரமான அவைகளில் ஈடுபட வேண்டாமென்று ஸ்ரீ ஸவர்க்கார் எச்சரித்திருப்பது மிகவும் சமயோசிதமா யிருக்கிறது. ஹிந்துக்களின் க்ஷேமத்திற்காக ஹிந்து மஹாஸபையை வலுப்படுத்த வேண்டிய அவசியத்தையும், மஹா ஸபையாருக்கே வோட்டுக்கொடுத்து எல்லா பிரதிநிதி ஸ்தானங்களையும் கைப்பற்றவேண்டிய அவசியத்தையும் அவர் குறிப்பிட்டிருப்பது நம்மவர்கள் கவனிக்கக்கூடியதாகும். தேசத்தில் காங்கிரஸ் ஒன்றுதான் நமக்கு கதியென்று நினைத்துவந்த காலம்போய், ஹிந்துக்களின் பிரதிநிதி சபை ஹிந்து மஹா சபைதான் என்றும், அது ஒன்று தான் ஹிந்துக்கள் சார்பாகப் பேச உரிமை பெற்றதென்று உலகமெங்கும் மதிக்கப்படுகிறதும், பிரிட்டிஷ் மந்திரிகளும், வைஸ்ராய், கவர்னர் போன்றவர்களும் ஹிந்துக்கள் விஷயத்தில் மஹா சபையைக் கலந்தே காரியம் செய்ய வேண்டு மென்ற உறுதி கொள்ளும்படி செய்ததும் மஹா ஸபையின் பெரிய வெற்றியாக ஸ்ரீ ஸவர்க்கார் குறிப்பிடுகிறார்.

மஹா ஸபையின் [illegible] காங்கிரஸ் பலஹீனம் அடைந்து வருவதாயும் ஸ்ரீ ஸவர்க்கார் குறிப்பிடுகிறார். மஹா ஸபையின் வேலைத்திட்டத்தை காங்கிரஸ்காரர்களே எற்று பலபேர் மஹா ஸபையில் சேர்ந்து வருவதாயும், காங்கிரஸ் ஹிந்துக்களுக்கு அதன்வேலைத் திட்டத்தில் வெறுப்பு எற்பட்டு விட்டது வெளிப்படுவதாயும், இன்னும் பலர் காங்கிரஸை விட்டு விலக விருப்ப மிருந்தபோதிலும் சட்ட சபைப்பதவி போன்ற சொந்த லாபங்களுக்காகவே காங்கிரஸில்மனமில்லாமல் ஒட்டிக் கொண்டிருப்பதாயும் ஸ்ரீ ஸவர்க்கார் கூறுகிறார்.

சுதேசஹிந்து ராஜ்யங்களைப் பற்றி ஸ்ரீ ஸவர்க்கார் சொல்லி யிருப்பதும் மிக்க ஆழ்ந்த கருத்துக்கொண்டதாகும்.

சுதேச முஸ்லீம் ராஜ்யங்கள், இந்தியா முழுதுமுள்ள தங்கள் இனத்தாரின் க்ஷேமங்களில் கவலைகொண்டே ஸங்கேதமாக வேலை செய்கின்றன. ஆனால் காங்கிரஸானது ஹிந்துராஜ்யங்களைச் சிதற அடிக்கும் விபரீதவேலையில் இறங்கி, அவைகளை ஹிம்ஸிக்கிறது. இந்த விஷமத்திற்கு உட்படாமல் ஹிந்து ராஜ்யங்களனைத்தும் இத்தேச ஹிந்துஸமுதாயத்தின் க்ஷேமத்தை ஸம்ரக்ஷிக்க ஒன்றுபட்டு நிற்கவேணுமென்று ஸ்ரீஸவர்க்கார் கூறுகிறார். சுதேச ஸமஸ்தானங்களில் ஹிந்து ராஜதந்திரிகள் வெகு திறமையாக ராஜ்யநிர்வாஹம் நடத்துவதையும், ராணுவம், போலீஸ், நீதி, பொக்கிஷம் போன்ற முக்ய நிர்வாஹங்களில் நம்மவர்களின் திறமையும், அநுபவமும் அங்கே வெளிப்படமிகுந்தஸௌகர்யமிருப்பதாயும், வெளிநாட்டுப்படையெடுப்பிலோ, உள்நாட்டுக்கலஹத்திலோ ஹிந்துக்கள் எதிர்காலத்தில் ஸமாளிக்கவேண்டிவந்தால்மேற்கண்ட திறமை மிக உபயோகமாயிருக்குமென்றும், இதற்காக ஹிந்து ராஜ்யங்கள் யாவும் ஹிந்து என்ற முறையில் ஒன்றுபட்டு வலுவாக நிற்கவேண்டுமென்றும் ஸ்ரீ ஸவர்க்கார் சொல்லுவதை ஸூக்ஷ்மதரிசிகளான ராஜீய அறிவாளிகள் யாவரும் வரவேற்பார்கள்.

மேலும், ஸ்ரீஸ்வர்க்கார் இந்த யுத்தகாலத்தில், முன்பின் விரோதமாகப்பேசிக்கொண்டு, அஹிம்ஸை, பேச்சுஸ்வதந்திரம், ஸத்யாக்ரஹம் போன்ற அர்த்தமற்ற இயக்கங்களில் ஹிந்துக்கள் வீணாகச் சிக்கிக்கொண்டு தம் நன்மைகளைப் பாழாக்கிக் கொள்ளாமலிருப்பது அவச்யமென்று எச்சரிக்கிறார். இந்த யுத்தத்தில் ராணுவப்பயிற்சி போன்ற எந்தெந்தத்துறைகளிலெல்லாம் ஹிந்துக்கள் புகுந்து கொள்ளமுடியுமோ அவைகளில் உடனே பிரவேசித்து, இந்த யுத்தத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது ஹிந்துக்களின் கடமை யென்கிறார். காலாட்படை, கப்பல் படை, ஆகாயப்படை ஆகியவைகளில் ஹிந்துக்கள் ஏராளமாகச் சேரவேண்டும், புதிய கைத்தொழில், ஆயுத உத்பத்தி சாலை [illegible] இம்மாதிரி யுத்த முயற்சிகளில் ஹிந்துக்கள் தீவ்ரமாகப் பங்கு எடுத்துக் கொள்வது பிரிடிஷாருக்கு உதவும் நோக்கத்துடனல்லவென்றும், நமக்குக் கிடைத்த இந்த ஸந்தர்ப்பதை நாம் அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்வதே நோக்கமென்றும் வீர ஸவர்க்கார் கர்ஜிக்கிறார்.

ராஜீய தத்வங்களும், ஸூக்ஷ்மங்களும் நிறைந்த ஸ்ரீ ஸவர்க்காரின் அநுபவஸாத்யமான திட்டங்களை ராஜீய அறிவு மங்கியுள்ள மற்ற ராஜீய ஸபைகளும் முக்யமாக ஹிந்து ஸமுதாயமும் கவனிக்க வேண்டியது. அவச்யமாகும்.

விடுமுறை அறிவிப்பு

அடுத்த வாரம் ஸங்கிராந்தி பண்டிகையை முன்னிட்டு அச்சாபீஸுக்கு விடுமுறையாகையால் ஆர்யதர்மம் பத்திரிகை வெளிவராது.

மானேஜர்

ஓர் ஸமாதானம்

திவான்பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் எழுதுகிறார்

ஆர்யதர்மம் பத்ராதிபருக்கு:—
2—1—1941 உ௳ய தங்கள் தலையங்கத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல அனுமதிக்கவேண்டும். ஸமூகப் பொது விஷயங்களைப் பற்றி யார் பேசினாலும் பத்ரிகைகளில் அதை வகுத்து, சரி அல்லது தப்பு என்று எடுத்துக்காட்டுவது ஸஹஜம். அவ்விதமே நான் பேசியதைக் குறித்து ஸமாதானம் எழுத பாத்தியமும் உண்டு. பத்திரிகையில் அதற்கு இடமளிப்பதும் உசிதமாகும். பலாத்கார முறையிலோ நிர்ப்பந்திக்கும் வழிகளிலோ ஸமூஹ வ்யவஸ்தைகளைப்பற்றி சட்டங்கள் பண்ணுவது சரியல்லவென்று, ஸ்ரீமான் ஸவர்க்கார் அவர்களும், நானும் எங்கள் பேச்சுகளில் வ்யக்தப்படுத்தி இருக்கிறோம். சாதுர்வர்ண்யத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு; வர்ணஸங்கரத்தை நான் விரும்பவில்லை. நான்குவர்ணங்கள் தான் உண்டென்று மனு சொல்லுகிறார். பிறப்பை ஆதாரமாய்க்கொண்ட வர்ணவ்யவஸ்தை

தான் நிலைத்திருக்கும். வேறு மதஸ்தர்களை ஹிந்துக்களாக்குவது பிறப்பைப்பொறுத்து ஏற்படும் சாதுர்வர்ண்யத்திற்கு விரோதமானதாதலால், அதையும் நான் ஆக்ஷேபிப்பவன்தான். ஆனால், இப்போது தீண்டாதார் எனக்கருதப்படுவர்கள் சூத்ரர்களாக இருந்து, அசுத்த வாழ்க்கையாலும் தொழில்களினாலும் கீழ்த்தரப்பட்டவர்களென்று எனக்குத் தோன்றுகிறது. அவர்களின் வாழ்க்கையை மேன்படுத்தி, அவர்களுக்குள் குடிவழக்கம் நீங்கி, மனுஷ்யன் அசுத்தப்படாமல் அசுத்த தொழில்களை நடத்தக்கூடிய முறைகளும் ஏற்பட்டுவிட்டால், அசுத்தத் தொழில் செய்வோர்கள் இருக்க வேண்டிய அவச்யம் இல்லாமல் போய்விடும். அவர்களும் மற்ற ஹிந்துக்களைப் போல் ஆவார்கள். எட்டுக்கோடி ஜனங்களை ஸாக்ஷாத் சண்டாளர்கள் என்று சொல்ல முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. தீண்டாமை, நெருங்காமை, பார்க்கக்கூடாமை ஆகிய தோஷங்கள் பிறப்போடு உண்டானவை என்று சொல்லும் பக்ஷத்தில், கிறிஸ்தவன் அல்லது மஹம்மதியனாக மாறினவனுக்கு அவை எப்படிப் போக முடியும்?

இனி ஹரிஜனங்களை ஹிந்து ஸமூஹத்திலிருந்து நழுவி கிறிஸ்துவ, மஹம்மதிய சமூஹங்களோடு சேரவிடுதல் முடியாது. ஹிந்துக்களாக இருந்து வேறு மதத்தில் போனவர் திரும்பிவர இச்சித்தால், நாம் இழந்தவர்களை திரும்பி வருகிறார்கள் என்று எண்ணி அதற்கு இடம் தரல் வேண்டும். கடும் சொற்களால் காரியம் ஆவது ஒன்றும் இல்லை. நாங்களும் சனாதனிகள், வைதீகர்கள்தான், ஷட்கர்மாக்களை ஆனவரையில் தினமும் செய்து வருகிறோம் என்று ஸ்ரீமான் ராவ்சாகேப் நடேசய்யருக்கு எழுதியுள்ளேன். நமது சாஸ்த்திரங்களை நான் படித்திருக்கிறேன். நான் இப்பொழுது போகும்வழியைப் பற்றியும் சிந்தித்து இருக்கிறேன். நித்யவிதிகள், கௌணவிதிகள், அர்த்தவாதங்ளென்று வகைப்படுத்த வேண்டுமென்று எனக்கு சில அபிப்பிராயங்கள் உண்டு. அவைகளை பிறர்கள் ஒப்பாமல் இருக்கலாம். ஆயினும், என் நிலையைத் தெரிவிக்கவும், நான் ஸனாதனியாயிருப்பதோடு 'ஸங்கடன' கக்ஷியையும் சேர்ந்தவன் என்றும், மதமென்பது வாழ்க்கையில் மிக முக்ய ஸ்தானத்தைக் கொண்டது, அரசியல் போக்குகளுக்கு மதம் என்பது இணங்கக்கூடியது அல்ல என்றும், சொல்ல உரிமை வேண்டுகிறேன்.

முக்ய அறிவிப்பு

சந்தாதார்கள் தங்கள் 1941 வருட சந்தாவை கூடிய சீக்கிரம் அனுப்பி பத்திரிகையை ஆதரிக்கக் கோருகிறோம்.

1940ம் வருடத்திற்கே சந்தா கொடுக்கும்படி இருக்கும் சந்தாதார்களும் உடனே பழய பாக்கியுடன் புது வருட (1941) சந்தாவையும் சேர்த்து அனுப்பும்படி கோருகிறோம்.

சந்தா பாக்கியுள்ள நேயர்களுக்கு மேற்கொண்டு பத்திரிகை அனுப்பப் பட மாட்டாது.

மானேஜர்

கலியுகத்தின் கூத்து

(என். ஸாம்பசிவய்யர் வக்கீல் நாகை)

சென்ற பத்து தினங்களுக்குள் நடந்திருக்கும் கூட்டங்களுக்கு கணக்கேயில்லை. ஆங்காங்கு அவரவர்கள் கூடுவதும் அவரவர்களுக்குத் தோன்றுவதைப் பேசுவதுமாயிருக்கிறது. சண்டாளர்கள் மீது கருணை அதிகரித்து அவர்களுக்கு நமது வீட்டிற்கருகாமையில் வீடுகட்டிக் கொடுக்கவேண்டுமென்கிறார்கள். விதவைகள்வ மீது கருணை கூர்ந்து எப்பாடுபட்டும் அவர்களுக்கு புனர் விவாஹம் செய்யவேண்டுமென்கிறார்கள். கலியுகத்தில் அவரவர்களுக்குத் தோற்றுவதே சாஸ்திரமாக விளங்குமென்று சொல்லியிருப்பது வாஸ்தவமாக ஏற்பட்டிருக்கிறது. சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்து நியாயத்தைக்கண்டு பிடிக்க வேண்டுமென்ற எண்ணமிருந்தால் எல்லோரும் சேர்ந்து நியாயத்தையும் சாஸ்திர ரஹஸ்யங்களையும் தெரிந்துக்கொள்ள பிரயத்தனம் செய்யவேண்டும். அந்த எண்ணம் ஒருவருக்கும் கிடையாது. தனக்குத் தோற்றுவதை பேசுவதே முக்யமான கொள்கையாகத் தெரிகிறது

ராஜீய விஷயமாக பாடுபட முன் வருபவர்கள் மதத்தில் போய் ஏன் சம்பந்தப் படுகிறார்கள் என்பது தான் விளங்கவில்லை. தங்களுடைய செல்வாக்கை காரணமாக வைத்து ஆதிமுதல் ரராஜீய சபையாக விளங்கிவந்த காங்கிரஸ் மஹாஸபையானது நமது மத ஆசாரங்களையும் ஆலயங்களையும் ஒழிக்கப் [illegible] பட்டுவருகிறது. அது ஒரு பக்கமிருக்க புலியானது பசுவின் தோலைப் போத்துவதுபோல ஹிந்து மஹா சபை போன்ற அழகான பேரை வைத்து நமது மதாசாரங்களில் சம்பந்தப்பட்டு கெடுக்க முன் வந்திருக்கிறார்கள் சிலர் ராஜீய விஷயங்களில் அவர்களுடைய அபிப்பிராயங்களை ஒத்துக்கொள்ளாதவர்களை அவர்கள் நிர்பந்திக்க மாட்டார்களாம் மடாதிபதிகளை பறச்சேரிக்குப் போகும்படி கட்டாயப் படுத்தமாட்டார்களாம் தங்கள் சபையானது ராஜீய விஷயங்களை கவனிக்க ஏற்படுத்தப் பட்டதாகச் சொல்லுகிறவர்கள் அனாவச்யமாக மதசம்பந்தமான விஷயங்களில் தலையிட வேண்டிய அவச்யமேயில்லை.

ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் மதத்தை விட்டு விலகினவர்களை சுத்தி செய்து திரும்ப நமது மதத்தில் சேர்த்துக் கொள்ளலாமென்றும் அது சம்பந்தப்பட்ட வரையில் நியாயாதிகாரிகளால் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறதென்றும் அதை இனி ஆக்ஷேபிக்கக் கூடாதென்றும் சொல்லுகிறார். நமது மதக் கொள்கைகளை விட்டுக் கொடுத்து எந்த ராஜீயக் கிளர்ச்சியும் முன்னுக்கு வரமுடியாது. சாஸ்திரங்களை நன்றாகப் படிக்க முடியாமலிருக்கும் இக்காலத்தில் சிஷ்டாசாரங்களை மிகுதியாகக் கொண்டாட வேண்டியது அத்யாவச்யம் ஸ்ரீமத் பகவத்கீதையில் சிஷ்டாசாரங்களுக்கு கௌரவம் பகவான் வாக்கினாலேயே கொடுக்கப் பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட சிஷ்டாசாரங்களை மாற்றுவதென்பது கூடாது. நமது சாஸ்திரமோ சரிவரப் படிக்கப்படாத வரையில் எல்லோருக்கும் ஆதாரம் கிடைப்பதுபோல தோற்றம் ஏற்படுகிறது. அவரவர்களுடைய அபிப்பிராயங்களுக்குத் தகுந்தபடி ஆதாரங்களை சொல்லுவதற்கு ஆரம்பிக்கிறார்கள். கால தேச வர்த்தமானங்களை கவனிக்காமல் தங்களுக்கு சௌகர்யமாக இருக்கும் வசனங்களை மாத்திரம் பொருக்கி எடுத்து உத்கோஷிக்கிறார்கள்.

இன்னும் சிலர் ஆலயபிரவேசம், சுத்தி செய்து நம்முடைய மதத்திற்கு திரும்ப சேர்த்துக் கொள்வது முதலிய விஷயங்கள் சமூக சம்பந்தமான விஷயங்களே தவிர மதசம்பந்தமான விஷயங்களே யல்லவென்று ஒரே அடியாக அடிக்கிறார்கள். நாம் பெரியோர்களிடம் கேட்ட வரையில் நம்முடைய மதத்தைவிட்டு இதர மதங்களை அவலம்பித்தவர்கள் பிரஷ்டர்களாகப் போவதால் அவர்களை திரும்ப நமது மதத்தில் சேர்ப்பதற்கு இடம் இருப்பதாகத் தெரிய வில்லை. நம்முடைய ஸனாதன தர்மமானது குணத்தை முக்யமாக கொண்டதாக எண்ணவேண்டியிருக்கிறதே தவிர ஆள் கூட்டத்தை பொருள் படுத்துவதாகத் தெரியவில்லை. யுக தர்மத்தை அனுசரித்து மேன்மேலும் அதர்மம் விருத்தியாகி எல்லோரும் பிரஷ்டர்களாகப் போனாலும் விரைமுதலுக்கு சாஸ்திரீயமான குடும்பம் ஒன்றுவது தங்குமென்று சொல்வதிலிருந்து பிரஷ்டர்களை திரும்ப சேர்த்துக் கொள்ளுவதற்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை. இனி தன்னுடைய நிலைதவறின ஒரு ஸ்திரீயைத் திரும்பபிராயச்சித்தம் செய்து குடும்பத்தில் சேர்த்துக் கொள்வதற்கும் சாஸ்திரம் சொல்லுவார்கள் போலிருக்கிறது.

இவ்வளவு காலமாக சுப காரியங்கள் அதிலும் விவாஹ ஸம்ஸ்காரமானது உத்தராயணத்தில் நடத்தப்பட்டு வருவதை மாற்றி தக்ஷிணாயனத்தில் செய்யலாமென்று சிஷ்டாசாரத்திற்கு எவ்வித சமாதானமும் சொல்லாமல் சாஸ்திரம் சொல்ல ஆரம்பிக்கிறார்கள். அவ்விதம் சிஷ்டா சாரத்தை மாற்றவேண்டிய நிர்பந்தம் இப்போது என்ன வந்துவிட்டது? சமூகத்தில் பல காரணங்களினால் சிஷ்டாசாரங்கள் தானே மாறுவது போதாதென்று இதற்கு சாஸ்திரம் வேறு கல்பிக்கவேண்டிய காரணம் என்னவோ தெரியவில்லை. பெண்ணைப் பெற்றவர்களுக்கு வருஷத்தில் நாலுஐந்து மாதங்களுக்காவது ஒய்வு இருக்கக்கூடாதா? நடுவில் கொஞ்சம் ஒய்வு இருந்தால்மறுபடி புதிய தைர்யத்துடனும் உத்சாகத்துடனும் வரன் தேட ஆரம்பிக்கலாமே. இந்த விஷயத்தில் அத்வைத சபையானது பெருத்த சிரமத்தை வகித்து தனி கமிட்டிகளெல்லாம் போட்டு படாத பாடும்பட்டது. இந்த சிரமங்கள் இன்னும் விசேஷமான காரியங்களில் சிலவிடப்பட்டிருக்கலாம்.

ஸ்ரீ பூரி சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய ஆதரவில் தர்மராஜ்யாவென்ற பத்திரிகையை ஆசிரியராக இருந்து ஆரம்பித்து ஸனாதனதர்மத்திற்கு உழைத்துவந்த திவான்பஹதூர் ஸ்ரீமான் கே எஸ் ராமசாமி சாஸ்திரிகள் அவர்களை நமது ஸனாதன தர்மத்திற்கு ஓர் பெரிய பலமாக நாம் கருதியிருந்தோம். பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் சொல்லுகிறபடி கொஞ்சம் கொஞ்சமாக அபிப்பிராயங்களை மாற்றுவது போலிருந்து இப்போது அநேகமாக காங்கிரஸ் வாதிகளுடைய அபிப்பிராயங்களுக்கு இறங்கிவிட்டார்கள் அதுவும் நமது தௌர்பாக்யமே.

லலிதாத்ரிசதீ

நாகரலிபியில் மூலமும்,

நாமாவளியும் விலை ரூ. 0—3—0.

ஷை பாஷ்யம் ரூ. 1—0—0.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக் கூடம், லிமிடெட், கும்பகோணம்

சாந்தரஸம்.

(மஹாமஹோபாத்தியாய ராயம்பேட்டை கிருஷ்ணமாச்சாரியார்)

இந்தச் சாந்தரஸம் இல்லை என்று சொல்லுகிறவர்கள் எழுப்பும் ஆக்ஷேபங்களையும் இவைக்கு மற்றவர் கூறும் ஸமாதானங்களையும் இனிக்கூறுவோம்:—

ஆதி பரதசாஸ்திரத்தில் சாந்தரஸம் பரத மஹர்ஷியால் காட்டப்படவில்லை

शृङ्गारहास्यकरुणा रौद्रवीरभयानकाः । बीभत्साद्भुत संज्ञाश्चेत्यष्टौ नाट्ये रसाः स्मृताः । एते ह्यष्टौ रसाः प्रोक्ता द्रुहिणेन महात्मना ।

என்றல்லவா பரதகாரிகை? ஸ்ரீ காளிதாஸ மஹாகவியும்

'भवतीष्वष्टरसाश्रयो नियुक्तः' என்றே கூறுகிறார். பரதர் மற்றரஸங்களுக்கு வ்ருத்தி வத்யங்கங்களைச் சொல்லியிருக்கிறார். அந்தப் ப்ரகரணத்திலும் சாந்தரஸத்தைப் பரதர் எடுக்கவில்லை 'रतिर्हासश्च शोकश्च .... ' என்று எட்டுரஸங்களுக்கும் எட்டு ஸ்த்தாயிபாவங்கள் சொல்லப்பட்டனவேயன்றி சாந்தரஸத்துக்கு ஸ்த்தாயிபாவம்(விதை) சொல்லப்படவில்லை. ஆகையால் இந்தச் சாந்தரஸம் பரதருக்கு அபிமதமன்று.

இந்தக் கொள்கையை பலமாக ஆதரிக்கும் ப்ராசீனர்களுள் முக்யமானவர் தசரூபாவலோக கர்த்தாவான தனிகரே. அபிநவகுப்தருடைய அபிநவ பாரதியை (நாட்யசாஸ்த்ர வ்யாக்யானம்) பார்த்தால் இந்தக்கொள்கை அவருக்கு முன்பேயே இருந்ததாகத்தெரியவருகிறது.

तस्याचार्येण विभावाद्यप्रतिपादनात् लक्षणाकरणात्

என்பது தனிகரின் வாக்யம்.

சாந்தரஸத்தைஸ்த்தாபிப்பவருள் ப்ரதானபூதர் அபிநவகுப்த பாதர், நாட்டிய சாஸ்திரத்தின் பழைய ஓலைச்சுவடிகளில்

बीभत्साद्भुतशान्ताश्च

என்றும்

जुगुप्साविस्मयशमाः स्थायिभावाः प्रकीर्तिताः

என்றும் பாடங்கள் காணப்படுவதாகவும்

एवमेतेषां .... स्थायिभावांश्च रसानामनुक्रमिष्यामः

என்பதற்குப் பிறகு இப்போது காணுகிறபடி तत्र शृङ्गारो नाम என்று ஆரம்பிக்காமல் तत्र शान्तो नाम என்று முதல் முதலிலேயே சாந்தரஸத்துக்கு லக்ஷணம் முதலியவை எழுதப்பட்டிருப்பதாகவும் அபிநவகுப்தர் அபிநவ பாரதியில் எழுதுகிறார்.

अव्यक्तरूपं सत्त्वं हि ज्ञेयं नवरसाश्रयम्

என்று இருபத்திரண்டாம் அத்யாயத்தில் மூன்றும் சுலோகம் இருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும். வேறு சிலர்—மற்ற ரஸங்களோடு சாந்தரஸமும் மற்ற ரஸங்களுடைய ஸ்த்தாயிபாவங்களோடு சாந்தரஸத்தின் ஸ்த்தாயிபாவமும் ப்ரதமஹர்ஷியால் படிக்கப்படவில்லையென்பது உண்மையே. ஆயினும் பரதருக்கு சாந்தரஸம் அபிமதமல்லவென்று சொல்லமுடியாது.

‚पुनश्च भावान् वक्ष्यामि स्थायि संचारिसत्त्वजान्''

என்று தொடங்கியமஹர்ஷி முதலில் ஸ்த்தாயிபாவங்களைக் கூறிவிட்டு ஸஞ்சாரி பாவங்களை (வ்யபிசாரி பாவங்களை) சொல்லத் தொடங்கி निर्वेदग्लानि .... என்று முப்பத்து மூன்றுபாவங்களை நிரூபித்திருக்கிறார், तत्त्वज्ञानापदीर्ष्यादेनिर्वेदः स्वावमाननम् என்று நிர்வேதத்துக்கு லக்ஷணம் கூறப்படுகிறது. तत्र निर्वेदोनाम ....दारिद्र्य समुत्पद्यते என்று பரதரே கூறியிருக்கிறார் தத்வக்ஞானம் அதாவது உண்மையறிவு, ஆபத்து, பொறாமை முதலியவைகளால் தன்னிகழ்ச்சி (தன்னைத் தானே இகழ்ந்துகொள்வது நிர்வேதம் என்று கூறப்படும்என்பது இதன் பொருள் ஆகையால் இந்த நிர்வேதம் என்பது அசுபம் போன்றது. இப்படி இது அமங்களமாயிருந்தும் வ்யபிசாரி பாவங்களுள் முதன்மையில் படிக்கப்படுவதின் கருத்து என்னவென்றால் இந்த நிர்வேதம் தேஹளீதீபநியாயத்தால் (இடைகழியில் (ரேழியில்) வைத்த விளக்கு கூடத்துக்கும் வாசலுக்கும் இரண்டுக்கும் உபயோகமாகிறது) முன்சொல்லிய ஸ்த்தாயிபாவங்களிலும்சேரவேணும், வ்யபிசாரிபாவங்களிலும் சேரவேண்டுமென்பது தான். இது ஸ்த்தாயிபாவத்தில் சேர்ந்துவிட்டால்இதனை ஸ்த்தாயிபாவமாகக்கொண்டஒரு ரஸம் ஒப்புக்கொள்ளப்படாமலிருக்க முடியாது. அந்த ரஸம்தான் சாந்தரஸமென்பது. இந்த வழியில் செல்லுகிறவர்களுள் முதன்மை பெற்றவர் மம்மட பட்டர் निर्वेदस्थायिभावोऽस्ति शान्तोऽपि नवमो रसः என்பது இவர்களின் கொள்கை.

அஹிம்ஸைக்கு எதிர்ப்பு

மிதவாதிகளின் அபிப்பிராயம்

கல்கத்தாவில் மிதவாதிகளின் வருஷாந்தரக் கூட்டம் ஸ்ரீமான் சந்தரவர்க் தலைமையில் கூடியது. யுத்தம் முடிந்தபின் 2 வருஷத்திற்குள் இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டந்தஸ்து கொடுப்பதாக இப்போதே உறுதிகூற வேணுமென்றும் அது வரையில் வைஸ்ராய் நிர்வாஹ ஸபையானது பிரதிநிதித்வம் வாய்ந்ததாக விஸ்தரிக்கப்படவேணுமென்றும் தீர்மானிக்கப்பட்டது

ஸ்ரீ சந்தரவர்க் தமது தலைமையுரையில், காந்திஜியின் அஹிம்ஸை ஹிந்துமத விரோதமென்றும் அவச்யமான ஸமயத்தில் ஹிம்ஸை செய்வதை ஹிந்துமதம் ஏற்பதாயும் அஹிம்ஸையானது மதம், ராஜியம், பொருளாதாரம், ஸமூஹம் ஆகிய எந்த வகையிலும் ஏற்கத்தக்கதில்லை யென்றும் கூறினார்.

மதுரையில் அதர்மஸபைகள்

புண்ணிய க்ஷேத்ரமாகிய மதுரையில் ஹிந்துமஹாஸபையை ஒட்டி அநேக அதர்ம ஸபைகள் நடந்தன. ஆர்யஸமாஜிகளின் கூட்டம் தென்னிந்தியாவிற்கே புதிது. அதில் வேதம் எல்லா ஜாதியாரும் படிக்கலாமென்றும், ஜாதி பேதம் தொழிலைப்பொறுத்ததென்றும், தீர்மானிக்கப்பட்டதுடன் எல்லா ஜாதியாரும் சேர்ந்து ஸமபங்க்தி போஜனம் செய்வது தேசக்ஷேமத்திற்கு [illegible] தீர்மானிக்கப்பட்டது அதன்படி யாவரும் சேர்ந்து தின்றார்களாம். விதவாவிவாஹ மகாநாடும் ஒன்று நடந்தது. அதைப்பற்றிப்பலர் மனம் போனபடி யெல்லாம் பேசினார்களாம்!

பெண்களுக்கு கட்டாயக் கல்வி. குடந்தையில் அமுல்.

கும்பகோணம் முனிஸிபல் எல்லைக்குள் ஸ்திரீகளுக்கு கட்டாயக் கல்வி திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேணுமென்று முனிஸிபாலிடி செய்த தீர்மானத்தை கவர்ன்மென்டார் அங்கீகரித்து விட்டார்களாம்.

பிப்பிரவரிமீ 1உ முதல் இது அமுலுக்குக் கொண்டு வரப்படுமென்று தெரிகிறது.

அஹிம்ஸையை மீறுவேன்

காந்தி தத்வத்தை நான் ஏற்கவில்லை

காங்கிரஸ் தலைவர் பேச்சு

காங்கிரஸ் தலைவரான மௌலானா அபுல் கலாம் ஆஸாத் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி கொடுத்துப்பேசுகையில்:—

"இந்தியா மீது எதிரிகள் படையெடுத்துவந்தால் அப்போது அதை எதிர்க்க நான் ஆயுதம் எடுத்துச் சண்டை போடுவேன். அஹிம்ஸையை தள்ளிவிடுவேன். அஹிம்ஸா விஷயமாக காந்திஜியின் முழு எண்ணத்தையும் நான் ஏற்கவில்லை" என்று கூறினார்.

காங்கிரஸ் தலைவர் கைதியானார்

காங்கிரஸ் தலைவரான மௌலானா அபுல் கலாம் ஆஸாத், அலஹாபாத்தில் யுத்தத்திற்கு விரோதமாகப்பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்டு கல்கத்தாவில் கைது செய்யப்பட்டார். பாதுகாப்புச்சட்டபடி இவர் மீது கேஸ் நடைபெறும்.

ஏகாதசி உபன்யாசம்.

குடந்தை சோலையப்பமுதலியார் அக்கிரகாரம் ஸ்ரீ விசாலாக்ஷி அம்மன் சன்னதியில் ஸ்ரீ ஆசார்யாளின் ஆக்ஞைப்படி 9–1–41 குருவாரம் ஏகாதசியை முன்னிட்டு மாலை 4 மணி முதல் விக்ரபாண்டியம் ப்ரஹ்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்கள் திருவிசநல்லூர் அய்யாவாள் அவர்கள் சரித்திரமும் பாகவதர்களின் சரித்திரமும் உபன்யாஸம் செய்வார்கள். ஆஸ்திக மகாஜனங்கள் யாவரும் விஜயமாகும்படி பிரார்த்திக்கிறேன்.

சா. சுப்பிரமணிய அய்யர்,
ஸ்ரீமடம் முத்திராதிகாரி.

ஸ்ரீ சுந்தரதாதாசார் காலமானார் கும்பகோணம்

இங்கர் அய்யங்கார் தெரு ஸ்ரீ உபய வேதாந்த அக்னிஹோத்ரம் பட்டுஸ்வாமி குமாரர் ஸ்ரீ சுந்திரதாதாசாரியார் வெள்ளிக்கிழமை அகால மரணம் அடைந்த செய்தியை அறிவிக்க விசனிக்கிறேன். இவர் வேதங்களிலும் சாஸ்திரங்களிலும், விசேஷ பாண்டித்யமுடையவர். இவர் இரண்டு மாதமாகப் பிணிவாய்ப்பட்டிருந்தார். இவருக்கு மனைவியும் இரண்டு குமாரர்களும் வயது முதிர்ந்த தந்தையுமிருக்கிறார்கள். ந.நி

ராதாகல்யாண மஹோற்சவ காலங்களில் உங்கள் கையில் அவசியம் இருக்க வேண்டியது. எது?

ஸ்ரீ ராதாகிருஷ்ண சரிதாமிர்த ஸாரஸங்கிரஹம்

சீர்காழி R சுப்பராமய்யர் அவர்களால் புராணங்களின் சாரத்தையும், கிருஷ்ண விஷயமான பாட்டுகளையும், கிருஷ்ண மந்திரங்களையும், மிக அழகாக கோர்த்தெழுதப்பட்டது.

விலை:—

நாகரத்திலும் தமிழிலும்	0—8—0
தமிழில்	0—5—0
நாகரத்தில்	0—5—0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்
கும்பகோணம்.

வெளியூர் செய்திகள்.

மஹாதானபுரம்.
உபந்யாஸம்

3—1—41-உ வெள்ளிக்கிழமை தினம் இரவு 8½-மணிக்கு கீழமடத்தில் ஸ்ரீமத் பாஷ்ய ஸ்வாமிகளென்று சொல்லப்பட்டு வரும் சற்குருசச்சிதான்ந்த தீர்த்த ஸ்வாமிகள் சன்னிதியிலும் கிரும மகா ஜனங்கள் முன்னிலையிலும் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் பாகவதத்திலிருந்து ஜடபரத முனிவரின் கதையை ஸ்லோகமாகவும் உபமான உபமேயங்களுடன் நாஸ்திகர்களையும் ஆஸ்திகர்களாகும்படி சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்து உபந்நியாசம் செய்தார்கள்.

கடைசியாக சற்குரு சச்சிதானந்த தீர்த்தஸ்வாமிகள் அவர்கள் தீக்ஷிதர் அவர்களின் உபந்நியாசத்தை மிகவும் சிலாகித்து பேசியதுடன் வந்திருந்த பக்தகோடிகளுக்கு உபதேசித்து அனுக்கிரஹித்தார்கள்.

பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்கு வைதீக தர்ம ஸம்ரக்ஷக என்று ஆச்சார்யாளால் அளிக்கப்பட்ட பட்டமானது. அன்வர்த்தமாயிருந்து வருவதைப்பார்க்க மிகவும் சந்தோஷப்படுவதாகவும் சொல்லிமுடித்தார்கள்.

எம். வெ. துரைசாமி,

உபந்நியாஸம்

25—12—40ல் கும்பகோணம் சோலையப்ப முதலியார் தெருவிலுள்ள விசாலாக்ஷி அம்மன் கோவிலில் ஆசார்யர்கள் உத்திரவை அனுசரித்து ஷை தெரு எஸ். அய்யாத்துரை அய்யர் அவர்களால் கீதை யோக சாஸ்திரத்தை அனுசரித்து உபந்யாஸம் செய்யப்பட்டது. அத்துடன் அத்வைத ஸாரமும் நன்ருய் சொல்லப்பட்டது. அந்த உபந்யாஸம் வெகு ஸாரமாயிருந்ததாக அதை கேட்டவர்கள் மெச்சினுர்கள். (ந—நி)

கோனேரிராஜபுரம்.

ராதாகல்யாண மஹோத்ஸவம்.

நிகழும் விக்ரம-ஷ மார்கழி-மீ 22-உ ஞாயற்றுக்கிழமை காலை 8-மணியிலிருந்து 1-மணி வரையில் உள்ளூர் பாகவத கோஷ்டிகளால் இஞ்சுவர்த்தி,திவ்யநாமம் முதலியவைகளுடன் வெகுவிமர்சையாய் ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவம் நடைபெற்றது. இரவு பெருமாள் கீழ்கண்ட கச்சேரிகளுடன் வீதி வலக்காக்ஷி விமர்சையாய் நடைபெற்றது.

ஷை உத்ஸவத்தை முன்னிட்டு 3-1-41 வெள்ளிக்கிழமை இரவு 8-மணிக்கு திருவாடுதுரை T. N. ராஜரெத்தினம் பிள்ளை அவர்களால் நாதஸ்வரக் கச்சேரியும் வெள்ளி சேஷ வாஹனத்தில் வரதராஜஸ்வாமி, புறப்பாடும் விமர்சையாய் நடைபெற்றது. 4—1—41 சனிக்கிழமை இரவு 8-மணிக்கு கதாரத்னம் திருவையார் பிர்ம்மஸ்ரீ பி. அண்ணுசாமி பாகவதர் அவர்களால் "ருக்மணி கல்யாணம்" ஹரிகதாகாலக்ஷேபம் நன்ருக நடைபெற்றது. 5—1—41ல் ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு திருவிழிமலை சகோதரர்கள் நாதஸ்வரம் நீடாமங்கலம் மீனுக்ஷி சுந்தரம் பிள்ளை—தவுல், கொரனுடு கோவிந்தருஜு பிள்ளை—தவுல் இவர்களுடைய நாதஸ்வரக்கச்சேரியுடன் 5—1—41-ல் இரவு 8-மணிக்கு ஸ்ரீ வரதராஜஸ்வாமி கருடவாஹனத்திலும் ஸ்ரீ ஹனுமார் வாஹனத்தில் ஸ்ரீ ராமர் புறப்பாடும் கச்சேரிகளுடன் வெகுவிமர்சையாய் வீதி வலக்காக்ஷி நடைபெற்றது 5—1—41-ல் பகல் காலை 8-மணிக்கு பஜனை மாந்தை பிர்ம்மஸ்ரீ சுப்பய்யா பாகவதர் அவர்களால் பஜனை திவ்யநாமம், கல்யாண அஷ்டபதி முதலியவைகள் கிருமத்தாருடைய முயற்சியாலும் வெகு சிறப்பாய் நடைபெற்றது. இவ்வூர் ஸ்ரீ உமாமகேச்வரஸ்வாமிக்கு மார்கழி-மீ 20-உ (3—1—41)ல் முதல் ஆருத்ரா உத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகிறது. 11—1—41 சனிக்கிழமை தினம் சிதம்பரம் தாலுகா பழூர் ஸ்ரீமதி P.R.S. செல்லம்மாள் அவர்களால் தகுந்த பக்க வாத்தியங்களுடன். 9-ம் திருநாள் ஆருத்ரா உத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீஉமாமகேஸ்வரஸ்வாமி வீதிவலக்காக்ஷியுடன் கச்சேரியும் நடைபெறும். மறுநாள் ஞாயிறு திருவாதிரை தினம் காலை 12-மணிக்கு ஸ்ரீ நடராஜர் மேளதாளவைபவங்களுடன் விசேஷ அலங்காரத்துடன் வீதிவலக்காக்ஷி நடைபெறும். காலை 4-மணிக்கு நடராஜஸ்வாமிக்கு மஹாபிஷேகமும் வேதபாராயணமும் ஷோடச உபசாரத்துடன் அலங்கார தீபாராதனை முதலியவைகள் நடைபெறும். K. S. M.

ஸ்ரீவைகாநஸ யுவர் அபிவிருத்தி சபை மாம்பலம்

மார்கழிமீ 15தேதி (29-12-40) ஞாயிற்றுக்கிழமை பகல் 4மணிக்குஷை சபையின் 2வது கூட்டம் ஆரம்பமாயிற்று. அதற்கு முன் மாம்பலம் கோதண்ட ராமஸ்வாமி ஸன்னதி அர்சகரான ஸ்ரீமான் உ. வே. வெங்கடரங்க பட்டாசார்யார் திருமாளிகையிலிருந்து தலைவரின் வரவேற்பு ஊர்வலம் நடந்தது. ஸ்ரீமான் உ. வே. ராம கிருஷ்ணபட்டாசரிய ஸ்வாமியால் ஷை சபையின் துவஜமாகிய கருடதுவஜத்தை மங்கள வாத்தியங்களுடன் ஏற்றிவைத்தார். துஜ வணக்கம் நடந்த பிறகு ஸ்ரீமான் உ. வே. திருவல்லிகேனி வ. திருவேங்கட பட்டாசாரிய ஸ்வாமி அக்கிராஸனம் வஹித்தார்.

பிறகு சபையின் காரியதரிசியான ஸ்ரீ உ வே சைதாப்பேட்டை கிருஷ்ண பட்டாசாரியாரால் அக்ராஸனருக்கு வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு அக்கிராஸனரும் விரிவாக பேசினுர். பாஷ்ய பட்டாசார்யரால் இந்த சபையின்பேரை ஸ்ரீவைகானஸ திவ்ய சாஸ்திர விவர்தனி சபை என்று வைக்கவேணும் என்று கேட்டுக்கொள்ள அதை ஏகமனதுடன் ஆமோதித்தார்கள்.

பிறகு ஸ்ரீமான் உ வே முசிரி கோபால பட்டாசாரிய சுவாமியால், அர்ச்சா பிரசம்சா என்னும் விஷயத்தைக்கொண்டு மிகவும் ரஞ்சகமாக பேசினுர்கள்.

மார்கழிமீ 12உயில் ஆரியதர்மம் பேபரில் அர்ச்சகர்களைப் பற்றி வெளியான சில விஷயங்களை ஆமோதித்தும், சில விஷயங்களை கண்டிக்கிறதென்றும் பிரேரிக்க அதுவும் நிறைவேறியது. பிறகு தலைவரால் வைகாநஸ சூத்திரமே எல்லாசூத்திரங்களும் முன்னுனது என்று இதர சூத்திரங்களைக் கொண்டே நிரூபித்தார். தண்டையார் பேட்டை ஸ்ரீமான் உ வே வெங்கடரங்க பட்டாசாரியாரால் வந்தனுபசாரம் சொல்ல கூட்டம் மங்களகரமாக இனிது முடிந்தது.

சை ந கிருஷ்ணபட்டாசாரியார்

ஸந்தியாவந்தன மஹிமை.

கும்பகோணம் டபீர்மேலத்தெருவில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் அவர்கள் ஸ்ரீமடத்தில் பணையூர் ப்ரும்மஸ்ரீ நா. ராமனுத சாஸ்திரிகள் (நைஷ்டிக பிரும்மசாரி) அவர்களால் "ஸந்தியாவந்தன மஹிமை" என்னும் விஷயத்தைப்பற்றி விரிவாகஅர்த்த புஷ்டியுடனும், எப்படி, எதற்காக அனுஷ்டிக்கவேண்டியது என்பதையும், அதன் பலன்களைப்பற்றியும், தெளிவாகவும் உருக்கமாகவும் நாளது மார்கழிமீ 15உ (29—12—40) முதல் 4—1—41 முடிய ஒரு வாரம் பிரதிதினம் மாலை 4½ மணிக்கு மேல் உபன்யாஸம் நடைபெற்றது. அநேக ஆஸ்திகபக்த ஸ்திரீ புருஷர்கள் வந்து மகிழ்ச்சியுடன் சிரவணம் செய்து ஆனந்தித்தார்கள். உபன்யாஸம் முடிவான 4—1—41ல் குடந்தை வக்கீல் ஸ்ரீ சி. எஸ். சௌந்தரருஜ அய்யங்ார் அவர்கள் ஷை உபன்யாசத்தின் மூலம் ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டிய அவசியமும் விதிகளும் நன்ருக தெரிகிறபடியால் யாவரும் அந்தப்படி தவருமல் அனுஷ்டித்து வரவேண்டுமென்றும், ஸ்ரீ சி. பி. கிருஷ்ணசாஸ்திரிகள் அவர்கள் ஸந்தியாவந்தனம் முதலிய நித்ய கர்மானுஷ்டானங்களை உச்சரிப்பு வார்த்தைகளில் அக்ஷரப்பிசகில்லாமலும் பக்தியுடனும் சிரத்தையுடனும் அனுஷ்டித்துவந்தால்சகலமான யோக்கியதைகளும் தாஞகவே உலகமாதாவால் ஏற்படக்கூடுமென்றும், கல்லூர் ஸ்ரீ ருமஸ்வாமிய்யர் அவர்கள் உபந்யாசம் செய்தும், எல்லாரும் தவருமல் நித்ய கர்மானுஷ்டானங்களை செய்தும் வந்தால் உலகம் க்ஷேமம் அடையும் என்றும் பரித்தியூர் ஸ்ரீ அ. கோபாலய்யர் அவர்கள் ஒரு மரத்துக்கு எப்படி வேர் முக்கிய அம்சமோ அதுபோல் பிராமணர்களுக்கு ஸந்யாவந்தனம் நித்ய கர்மானுஷ்டானம் முக்கியம் என்றும் அவரவர்கள் தினசரி செய்து வரும் இதரகடமைகள் அதாவது ஸ்நானம், போஜனம் குடும்ப சம்ரக்ஷணம் இவைகளைப் போல் ஸந்யாவந்தனம் முக்கியமான முதல் கடமை என்றும், அந்தப்படி அனுஷ்ட்டிப்பதால் ப்ரும்ம தேஜஸ்ஸும் யோக்ய தாம்சமும், விசேஷமாக ஏற்படுகிறதென்றும், உபந்யாஸம் உலக க்ஷேமத்தை கருதி செய்துவரும் ஷை நைஷ்ட்டிக்க பிரும்மசாரி அவர்களுக்கும் சிரவணம் செய்து வரும் ஆஸ்தீக பக்தர்களுக்கும் தன்மனமார்ந்த கிருதக்ஞையை செய்யும் வந்தனுேபசாரத்துடன் முடிவு பெற்றது. அன்று இரவு பூஜை விமர்சையாக ஆர்யதர்மம் ஆபீஸில் நடைபெற்றது. ந-நி

தஞ்சையில் ஓர் வித்வான் மரணம்

தஞ்சையில் 4 தினங்கள் முந்தி ப்ரம்மஸ்ரீ திருவசநல்லூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் பரமபதம் அடைந்தார். காலஞ்சென்ற ப்ரம்மஸ்ரீ ராமஸுப்பா சாஸ்திரிகளின் சிஷ்யராயிருந்து பிறகு தர்ம சாஸ்திரங்களில் நல்ல பயிற்சி பெற்று சாஸ்திரிகள் தனது அபிப்பிராயங்களை கொஞ்சமும் தாக்ஷிண்யமின்றி எடுத்துறைக்கும் தீரனுய் விளங்கி வந்தார். வைதிக கர்மாக்களில் எல்லோர்க்கும் ச்ரத்தை உண்டாக்கும் வண்ணம் எடுத்துறைக்கும் சொல்வன்மையுள்ளவர். அவர் மரணத்தால் வைதீக ஸமூகத்திற்கு ஓர் பெரிய குறையே. ஆர். ராதாகிருஷ்ணய்யர் வக்கீல்;

மதுரை
ஸ்ரீ பாலமீனும்பிகை லக்ஷார்ச்சனை வைபவம்

யுத்தத்தில் ஜெயம் பெறவும் லோக க்ஷேமார்த்தமாகவும் அதர்மம் ஒழியவும், தர்மம் செழித்தோங்கவும் சென்ற மார்கழி-மீ 11உ முதல் 15உ வரை 25-12-40 20—12—40 வரை 5 தினங்களும் மதுரை தமிழ்ச்சங்கம் ரோட் 55 நி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ பால மீனும்பிகைக்கு லக்ஷார்ச்சனைகளும் மஹாபிஷேகமும், திருமஞ்சன ஊர்வலங்களும், வேதபாருயணங்களும் பஜனைகளும், உபந்யாஸங்களும், சங்கீதக்கச்சேரிகளும் நடை பெற்றன. ஊர்வலங்களில் சுமார் 5000 ஜனங்களுக்குக் குறையாமல் கலந்து கொண்டார்கள். மதுரை மாநகரிலுள்ள வைதீகர்கள் அனைவரும் வந்திருந்து இந்த லக்ஷார்ச்சனை மஹாயாகத்தை நடத்தி வைத்தார்கள். சென்னை ஸ்ரீ வத்ஸ சோமதேவ ஸர்மா அவர்கள், கும்பகோணம் அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியார் ஸ்வாமிகள் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தலைவர் ஸ்ரீமான் ராவ் சாகிப் N. நடேசய்யரவர்கள், மதுரை டவுன் சங்க அத்யக்ஷர் ஸ்ரீமான் N.R. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள் ஆஸ்திக ஹிந்து மாதர்கள் சங்கத்தலைவிகள், பாலிகாசங்க அங்கத்தினிகளும், ஸனாதன தர்ம வித்யாலயமாணவிகளுமான செள ஜெயலக்ஷிமி, பத்மாவதி ஆகியவர்கள் தினந்தோறும் உபந்யாஸம் செய்தார்கள் அதற்கு சுமார் 15000 ஜனங்கள் குழுமி இருந்தார்கள். தினந்தோரும் மாலையிலும் இரவிலும் பக்தி ஜனகமான ஸங்கீதக் கச்சேரிகளும் நடைபெற்றன. (ந. நி.)

திருவிசைநல்லூர்.
காலமானர்.

நாளது மார்கழிமீ 16உ (30—12—40) திங்கட்கிழமை விடியற்காலம் திருவிசநல்லூர் ஆயுர்வேத வித்வான் வைத்தியம் ஆர் பாலகிருஷ்ணய்யரவர்கள் 50வது வயதில் விண்ணுலகமடைந்தார். அன்னர், உலக பிரஸித்தியோடு ஆயுர்வேதத்திற்கு புத்துயிரளித்த மஹாவித்வான் திருவிசநல்லூர் சியாமளா சாஸ்திரிகளெனப்பட்ட வெங்கடசுப்பா சாஸ்திரிகளவர்கள் மைத்துனர் குமாரரும் முக்கிய சிஷ்யருமன்னியில் கீர்த்திவாய்ந்த வைத்யம் ராமசந்திரய்யரவர்கள் மாப்பிள்ளையுமாவரென்ற விஷயம் யாவரும் அறிந்ததே'

அவர் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு எவ்வித பிரதி பிரயோஜனத்தையுமெதிர்பாராமலேயே சிகித்ஸை செய்து உதவிபுரிந்துவந்ததோடு, பலவிதமான தர்மகாரியங்களிலும் ஈடுபட்டிருந்தார். ஆயுர்வேத சாஸ்திரமன்னியில் மற்ற கலைகளிலும் நிபுணராய் விளங்கிவந்தார்.

திருவிசநல்லூர் வேதகாவ்ய பாடசாலையைச் சேர்ந்த 'பாரதீ பவனம்' என்ற புஸ்தகசாலைக்கு நூற்றுக்கணக்கான விலையுயர்ந்த புஸ்தகங்களைக் கொடுத்திருக்கிருர்.

இம்மஹானை கெளரவிக்கும்பொருட்டு இவர் முக்ய சிஷ்யர் வைத்யம் டி வி சுப்பிரமணிய அய்யரால் வேப்பத்தூரில் ஸ்தாபித்து இரண்டு வருஷகாலமாய் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீ பாலகிருஷ்ண வைத்ய சாலை இரண்டு திநங்கள் மூடப்பட்டிருந்தது.

திண்டுக்கல்
வர்ணாச்ரம ஸங்கம்
உபந்நியாசம்

மேற்படி ஸபையின் ஆதரவில் திண்டுக்கல் ஸ்ரீ சங்கரமடத்தில் கவர்ன்மென்ட் ட்ரெயினிங் ஸகூல் உபாத்யாயரான ஸ்ரீமான் எஸ் கிருஷ்ணசர்மா பி. ஏ. எல். டி அவர்கள் கர்மாநுஷ்டான ஆவச்யகதை என்ற விஷயமாக உபன்யஸித்தார். இரவு 7 மணிக்கு ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமி கோவிலில் சென்னை ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் 'ஸ்வதர்மம்' என்பதைப் பற்றி பிரஸங்கித்தார். ஸ்ங்கத்தின் தலைவர் அட்வகேட் ஸ்ரீ விச்வநாதய்யரவர்களால் வந்தனேபசாரம் கூறப்பட்டது.

ஆத்தங்குடி
வார பாராயண பூர்த்தி

விக்கிரமஷு மார்கழிமீ 15உ ஞாயிற்றுக்கிழமை சென்ற ஒன்றரை மாத காலமாய் விமர்சையுடன் நடைபெற்று வந்த யஜுர் வேத பாராயணம் சம்பூர்ணமடைந்தது. விசேஷ சூக்தாதி அபிஷேகமும் லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனையும் அன்று விசேஷமாக நடைபெற்றது. ஆஸ்திகர்கள் ஏராள. மாய் குழுமியிருந்தனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பெற்று வைபவம் அன்றிரவு 9 மணிக்கு இனிது நிறைவெய்தியது. ந. நி.

கும்பகோணம்.
ஸ்ரீ கர்த்தஸ்வாமி புண்யதினம்.

நமது நகர் பெரிய தெருவில் பிருந்தாவனம் கொண்டிருக்கும் ஸ்ரீ வியாஸராஜ ஸ்வாமிகளின் மடத்து பீடாதிபதிகளுள் ஒருவரும் பாஷ்யதீபிகை என்ற நூலின் ஆசிரியமான ஸ்ரீ ஜகந்நாத தீர்த்த ஸ்வாமிகளின் புண்ணிய தின மகோற்சவம் 30-12-40ல் ஸ்ரீ எம். ராமராவ் அவ்ர்களின் மேற்பார்வையில் கொண்டாடப்பட்டது. மத்தியானத்தில் அபிஷேகம் 'அலங்காரம்' 100 பேருக்கு போஜனம் இவைகளுடன் ஆராதனை செய்யப்பட்டது. பூஜகர் ஸ்ரீ நரசிம்மாசாரியரின் முயற்சி போற்றத் தகுந்தது. [ந. நி.]

குடந்தை
விநாயகர் வாசகசாலை
ஓர் உபன்யாசம்

சென்ற 29—12—40 மாலை 6 மணிக்கு ஸ்ரீ அபிமுகேஸ்வரஸ்வாமி ஆலயத்தின் நவராத்ரி மண்டபத்தில் ஓர் கூட்டம் கூடியது அச்சமயத்தில் அண்ணமலை பல்கலைக்கழக அருந்தமிழ் விரிவுரையாளர் ஸ்ரீமான் எ. சிதம்பரநாத செட்டியார் எம். எ. அவர்கள் 'சேக்கிழார் மகளிர்' என்பது பற்றி ஓர் சொற்பொழிவாற்றினர். அதில் அவர் பெரிய புராணத்தில் சேச்கிழாரால் சொல்லப்பட்ட காரைகாலம்மையார், இசைஞானியார், மங்கையர் கரிதி மூவரை பற்றியும் சொன்னர். பிறகு வி. விசுவநாதன் வந்தனேபசாரம் கூற, இரவு 8½ மணிக்கு கூட்டம் கலைந்தது ஒ. நி.

ஆஸ்திக தர்மத்தை கடைப்பிடைத் தொழுகிவந்த இம்மஹாபுருஷரின் ஆத்மா ஸர்வேச்வர் சரணகமலங்களில் சாந்தியுடன் நிலைமை யடைந்திருக்குமாறு அனைவரும் பிரார்த்திப்போமாக. (ந. நி.)

விழுப்புரம்
உபந்நியாஸம்

21—12—40 சனிக்கிழமை இரவு 8 மணிக்குஇவ்வூர் காலனியில் திருநெல்வேலி அட்வகேட் பிரம்மஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள், ஸ்ரீ ஆதி பகவத்பாதாளின் ஒரு ச்லோகத்தை எடுத்துக்கொண்டு 2 மணி நேரம் உபன்யஸித்தார்கள் பிரம்ம ஞானத்திற்கு ஆசார்யன் எப்படி ஸாதனமாகிருன் என்பதை எடுத்துக்கொண்டு ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீ பகவானே ஆசார்ய ரூபேண எவ்வாறு எலக்ட்ரிக், கரண்ட், நெடுகபரவியிருந்தாலும் ஒரு இடத்தில் நமது இஷ்டம் போல் ப்ரகாசம் தருகிறதோ அம்மாதிரி ஆவிர்ப்பாவம் அடைந்து ஸம்ஸார ஸாகரத்தைதாண்டுவிக்கிருரென்றும் அதற்கு ஸ்ரீ பகவானுடைய க்ருபை அவச்யமென்றும், அவருடைய க்ருபை எங்கும் ஒரேமாதிரியாக இருந்தாலும், ஸ்ரீ ஆதிபகவத்பாதாள் சொல்லிய" பர்ஜன்ய" த்ருஷ்டாந்தப்ரகாரம் மழை, கல், நிலம் முதலிய எல்லா இடங்களில் பெய்த போதிலும் உழுது பண்பட்ட நிலத்தில் பெய்யும் போது பிரயோஜனத்தை அடைகிறதோ அம்மாதிரியே அதிகாரி பேதத்தினல் அந்த க்ருபை பிரயோஜனத்தை அடைகிறதென்றும் ஆகவே ஸ்ரீ பகாவனுடைய ஆக்ஞா ரூபமான ச்ருதி ஸ்மிருதி, முதலியவைகளில் சொல்லியவைகளை அனுஷ்டானம் செய்து அவருடைய க்ருபைக்கு பாத்திரர்களாகி ஸம்ஸார ஸாகரத்தை தாண்டி பிரம்ம ஸாப்ரத்தை அடைகிருர்கள் என்றும் இன்னும் பலவித உதாஹரணங்களும் கேட்டவர்கள் மனது லயிக்கும்படி உருக்கமாய் உபன்யஸித்தார்கள் ந. நி.

காலமானர்

பொதுஜன ஊழியரும, காக்கழணி கிரும வாசியுமான ஸ்ரீ வ. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் குடல்நோய் உபத்திரவத்தால் 1940ஷு டிஸம்பர்மீ 30உ திங்கட்கிழமை தினம் சென்னை ஆஸ்பத்திரியில் சிவலோக ப்ராப்தி அடைந்தார். அன்னர் அத்வைதத்திலும், இதர சாஸ்திரங்களிலும் பாண்டித்யம் உள்ளவர். அடிக்கடி ஆர்யதர்மம் பத்திரிகையில் அவருடைய வியாஸங்கள் வெளிவரும். அவர் தன்னுடைய வயது முதிர்ந்த தாயாரையும், மனைவி மக்களையும் விட்டு பிரிந்ததற்கு விசனப்படுகிரேம். அன்னருடைய குடும்பத்தாருக்கு காக்கழணி கிருமவாசிகள் வருத்தத்தைதெரிவித்து அவருடைய ஆத்மா நற்கதி அடையும்படி இறைவனை வேண்டுகிரேம். R. ஸந்தானம் அய்யர்.

ராதாகல்யாண மஹோத்ஸவம்.
ஸ்ரீ வாஞ்சியம்

மார்கழி-மீ 13உ (27—12—40) வெள்ளிக்கிழமை தினம் ஸ்ரீ வாஞ்சியம் சன்னதித் தெரு ப. கோதண்டராமய்யர் கிரஹத்தில் வருஷந்தோறும் நடத்திவரும் ராதாகல்யாண மஹோத்ஸவ ஸம்பிரதாயத்துடன் வெகு விமரிசையாய் நடைபெற்றது. பக்த ஸந்தர்ப்பணமும், அன்றிரவு பில்லாங்குழல் கச்சேரியும், ராதாகிருஷ்ண படத்தை முத்து விமானத்தில் கிரும ப்ரதக்ஷணமும் செய்வித்து மறுதினம் ஆஞ்நேய உத்ஸவமும் நடந்தது. ஷ்டி உத்ஸவம் ஆரம்ப சமயத்தில் ஸ்ரீவாஞ்சியம் K. ராமச்சந்திரன் மூலம் ஸ்ரீ மதாசாரியாளால் அனுப்பப்பட்ட விபூதி, குங்குமப் பிரசாதத்தை ஆஸ்திகர்கள் அனைவரும் வினயத்துடன் கிருஹத்து தரித்துக் கொண்டார்கள் ஸ்ரீ பரமாசாரியாளுடைய பரமானுக்ரஹத்தால் நாம் சத்கர்மாவில் ஈடுபட்டு இஹபர ச்ரேயஸ்ஸை அடைவோமாக.

N. கிருஷ்ணசாமி சாஸ்திரி, முத்ராதிகாரி

வான்மீகரும் தமிழும்

(மதுரை பண்டிட் நாராயண அய்யங்கார் எழுதியது)

வால்மீகி ராமாயணம் சுந்தர காண்டத்தில் ராவணன் தொந்திரவு சகியாத ஸீதை உயிரை மாய்த்துக்கொள்ள யத்தனிக்கையில், ஆஞ்சனேயர் ஸீதையை ஸமாதனம் செய்ய நினைத்து அவளிடம் எவ்விதம் பேசுவது என்று தனக்குள்ளேயே ஆலோசிக்கும் பொழுது, அந்த கட்டத்தில் அடியிற் கண்ட வசனங்கள் காணப்படுகின்றன. (1) அந்தரம் த்வஹமாஸாத்ய ராக்ஷஸீநாமிஹஸ்தித: | சனை ராச்வாஸயிஷ்யாமி ஸந்தாப பஹுலாமிமாம். நான் இருக்கும் இடத்திலிருந்தே சமயம் பார்த்து ஸந்தாபம் நிறைந்த ஸீதையைத் தேற்றப்போகிறேன். (2) அஹம்த்வதி தநுச்சைவ—நான் மிகச் சிறிய உருவமுள்ளவன். வானரச்ச விசேஷத:— அதிலும் குரங்கு. வாசம்சோதாஹரிஷ்யாமி மானுஷீமிஹ ஸம்ஸ்கிருதாம்= மனிதர்களைச் சேர்ந்த ஸம்ஸ்கிருத பாஷையையும் பேசப் போகின்றேன். (மனிதர்களைச் சேர்ந்த ஸம்ஸ்கிருதப்பாஷையைப் பேசுவதில் யோசனை என்ன? பேசலாமேயெனில் (3) யதி வாசம் ப்ரதாஸ்யாமி த்விஜாதிரிவ ஸம்ஸ்கிருதாம்| ராவணம் மந்யமானாமாம் ஸீதா பீதா பவிஷ்யதி=பிராமணக்ஷத்திரிய வைச்யர்கள் போல ஸம்ஸ்கிருத பாஷை பேசுவேனேயாகில் என்னை ராவணனென நினைத்து ஸீதைபயப்படுவாள். (ஏனெனில்) வானரஸ்ய விசேஷணகதம் ஸ்யாதபிபாஷணம்=குரங்குக்கு விசேஷித்து மனிதப்பேச்சு எவ்விதம் ஸம்பாவிதம்? (மனித பாஷையைவிட்டு வேறு பாஷையில் பேசலாமே யெனில்) (5) அவச் [illegible] மனிதபாஷையையே நான் அவச்யம் பேசவேண்டும். ஏனெனில் அர்த்தவத்=அந்த பாஷைதான் நான் எதிர்பார்க்கும் பலத்தை யளிக்கும். என்? (6) மயா ஸாந்த்வயிதும் சக்யா நாந்யதேய மநிந்திதா—வேறு பாஷையால் பேசி இந்த ஸீதையை நான் சமாதானப்படுத்த முடியாது. (7) ஸேயமாலோக்ய மேரூபம் ஜாநகீ பாஷிதம் ததா| ரக்ஷோபிஸ்த்ராஸிதா பூர்வம் பூயஸ்த்ராஸம் கமிஷ்யதி—ஏற்கனவே ராக்ஷஸிகளால் பயப்படுத்தப்பட்ட ஸீதை என் ரூபத்தையும் தன் ஸம்ஸ்கிருதப் பேச்சையும் கேட்டு மறுபடியும் பயப்படபோகிருள் என்று இவ்விதம் ஏழுவாக்கியங்கள் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன.

ஆஞ்ஜனேயர் வானர இனத்தைச் சேர்ந்த வராதலால் தன் பாஷையில் பேசுவதா அல்லது மனித இனத்தைக் சேர்ந்த ஸீதையின் பாஷையாகிய ஸம்ஸ்கிருத பாஷையில் பேசுவதா என்று ஆலோசித்து மனித பாஷையைத் தவிர வேறு பாஷையில் பேசினால் ஸீதை விஷயங்களை அறியமுடியாதென்றும், ஆகவே மனித பாஷையில் பேசினால் தன்னை ராவணனென நினைக்க ஹேதுவாகு மென்றும், வேறு வழியில்லாததால் தன்னை ராவணனென ஸீதை நினைத்து பார்த்தும்கூட மனித பாஷையிலேயே பேசித்தீர வேண்டுமென்றும், உறுதிசெய்து கொண்டதாகப் பொருள் கிடைக்கின்றது. இவ்வசனங்களில் தமிழ் பாஷையைப் பற்றி ஒரு பதம் கூட காணப்படாததல் ஸீதையிடம் தமிழில் பேசினர் என்று இந்த வாக்யங்களுக்கே பொருள் கூறுவது ஸாஹஸம். மனுஷ்ய ஸம்ஸ்கிருதம், த்விஜாதி ஸம்ஸ்கிருதம், மனுஷ்ய வாக்யம், என்று தொடர்ந்த மூன்று சந்தர்ப்பங்களால் ஸீதையிடம ஆஞ்ஜனேயர் பேசியபாஷை விவரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த மூன்றும் ஒரு பாஷையைக் குறிப்பிடுமே யன்றி இரண்டு பாஷைகளைக்குறிப்பிடாது. "ஸம்ஸ்கிருதாம் வாசம்" என்ற வியக்தமான பதங்களுக்குத் தமிழ் பாஷையெனப் பொருள்கூறில் வியவஸ்தையின்றி எல்லா பதங்களுக்கும் எல்லா அர்த்தங்களையும் கூறிவிடமுடியும். லக்ஷணையாலும் தமிழ் மொழி என்ற அர்த்தம் கிடைக்காது. தமிழ் மனித பாஷையென்றும் பிரமாணங்களால் ஸித்தித்தாலல்லது 'ஸம்ஸ்கிருதாம் வாசம்' என்ற பதங்களுக்கு உரிய அர்த்தத்தை மாற்றுவது பெருந்தாது. ஆஞ்ஜனேயர் ஸீதையிடம் பேசியதற்குத் தமிழ் பாஷையைப் பொறுக்கி எடுத்தார் எனில் காரணமென்னவென்று கேழ்க்கின்ரேம். ஸம்ஸ்கிருதமும் இலக்கணத் தமிழும் ஸீதைக்குத் தெரியாதென்ரே, அல்லது ஆஞ்ஜனேயருக்கு பேசத்தெரியாதென்ரே சொல்லப் பிரமாணமில்லை. மேலும் ஆஞ்ஜனேயர் வானர ஜாதியானதால் மனித பாஷையில் பேசினல் ஓர் குரங்கு மனித பாஷை பேசுவது அஸம்பாவிதமெனக் கருதி தன்னை ராவணனென நினைத்து ஸீதை பயப்படுவாள் என்றும் அப்படி பயந்தாலும்கூட வேறுவழி இல்லாததால் மனித பாஷையையே துணிந்து பேச வேண்டுமென்றும் ஆஞ்சனேயரே காரணம் சொல்லி யிருப்பதால் நாம் வேறு காரணம் கற்பிப்பது அனுசிதம்.

ஆகவே வானரபாஷையொன்றும் அதற்கு மறுதலையான மனிதபாஷை ஒன்றும் அக்காலத்திலிருந்ததால் வானரபாஷையை ஸீதை அறியமாட்டாள் ஆனதால் மனிதபாஷையில்தான் பேசவேண்டுமென்றும் ஆஞ்சனேயர் நினைத்து அதன் பலாபலன்களையும் தீர ஆலோசிக்கவேண்டியதாயிற்று. அந்த மனிதபாஷை யாதெனில் 'ஸம்ஸ்கிருதாம் வாசம்' என ஸம்ஸ்கிருத பாஷையென வசனம் வெளிப்படை [illegible] ஸம்ஸ்கிருதத்தை வடமொழியென்றும், தமிழைத் தென்மொழியென்றும் இரு பாஷைகளுக்கும் பேதம் தெரிவதற்குச் சிலர் ஸங்கேதப் பெயர் இட்டிருக்கின்றனர். குமரிக்குத் தெற்கிலும் பல நாடுகள் இருப்பதால் குமரியைக் கடைசி தென் எல்லையாகக் கொண்ட தமிழ் பாஷை உண்மையில் தென் மொழியாகாது. அவ்விதமே கிழக்கு, மேற்கு, வடதற்கு என்ற திக்குகளிலும் கீழ் மேல் உலகங்களிலும் வழங்கிவரும் ஸம்ஸ்கிருத பாஷையும் உண்மையில் வடமொழி மாத்திரம் ஆகாது. ஆகவே வடமொழிக்கு மறுதலையாய் தென்மொழி என்று பெயர் பெற்றது என்பது பொருத்தமற்றதாகும். 'தமிழ்' என்ற பதம் ஸம்ஸ்கிருதத்தின் விகுருதியாகும். ஸம்ஸ்கிருதப்பெயரான 'த்ரமிட' என்பது முதலில் தேசத்தின்பெயராகி பிறகு தமிழ் பாஷையென பரவலாயிற்று. தம் மொழி என்பதே தமிழ் எனவாயிற்று என்பது சரியல்ல. வேறு பாஷை பதங்கள் தமிழில் வரும்பொழுது விகிருதியை யடைவது ஸம்பாவிதம். தமிழ் பதமே விகிருதியடையுமாகில் அது அபப்பிரம்சமாகும். அதை இலக்கணச்சொல்லாக ஆக்க பிரயத்தினப்படுவது தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெருமையளிப்பதாகாது. ததிமுகன் சுக்கிரீவனிடம் சென்று மதுவனம் அழிந்த விவரத்தை வர்ணிக்கும்பொழுது கூடவிருந்து கேட்டுவந்த லக்ஷ்மணன் அதையறியமாட்டாது ஸுக்ரீவனைப்பார்த்து கிமயம் வானரோ ராஜன் வநப: ப்ரத்யுபஸ்தித: கம் சார்த்தமபி நிர்திச்ய துக்கிதோ வாக்யமப்ரவீத் ராஜனே ததிமுகன் எதற்காக இங்கு வந்தான். எந்த விஷயத்தைப்பற்றி துக்கிதனக வார்த்தை சொன்னன் எனக் கேட்டு பிறகு ஸுக்கிரீவன் விஷயங்களைச் சொல்ல அறிந்துகொண்டதாகக் காணப்படுவதால் வானரர்களுக்கு ஓர் பாஷையுண்டென்பதும் ருசுவாகின்றது. சில வானரர்கள் மனித பாஷை அதாவது ஸம்ஸ்கிருத பாஷை யறிந்திருந்தனர் என்பது 'பஹுவ்யாஹரதானேந நகிஞ்சிதபசப்திதம்' என்ற கட்டத்தில் ஆஞ்சனேயர் வியாகரணம் அறிந்தவரென்பதும் அபசப்தம் அதாவது இலக்கணப்பிழையின்றி பேசுகிறவரென்பதும் ராமன் வசனங்களால் ஏற்படுகின்றது. ஆகவே வானர பாஷை, மனிதபாஷையென இரு பாஷைகள் ராமன் காலத்தில் இருந்தனவென்றும் ஆஞ்சனேயர் மனிதபாஷையான ஸம்ஸ்கிருதபாஷையில் ஸீதையிடம் பேசினர் என்பதும் ராமாயண வசனங்களால் ஸித்திக்கின்றது.

ஸ்ரீராதாகல்யாண மஹோத்ஸவம்.

இந்நகரத்தில் கும்பகோணம் சோலையப் பமுதலியார் அக்கிரஹாரத்தில் நீண்டகாலமாக ஸ்தாபிக்கப்பட்டு காலஞ்சென்ற வேணுகான வித்வான் பிரம்மஸ்ரீ சரப சாஸ்திரிகளால் கைங்கர்யத்துவந்த ஸ்ரீராம பஜனைமடத்தில் 5-1-41 ஞாயிற்றுக்கிழமையன்று ராதாகல்யாண மகோத்ஸவமானது ஸ்ரீ ராதாகல்யாண கமிட்டியாருலும் அக்கிரஹாரவாசிகளாலும் ரொம்பவும் விமர்சையாக நடைபெற்றது. காலையில் அக்ரஹார ஆரம்பத்திலிருந்து கல்யாண சீர்கள் மேளவாத்தியத்துடன் கொண்டுபோகப்பட்டு கல்யாண மகோத்ஸவமானது விமர்சையாக நடைபெற்றதுடன் பிராம்மண சந்தர்பணையும் நடைபெற்றது. மகோத்ஸவகாலத்தில் ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யாள் விபூதி குங்குமம் ப்ரசாதம் அனுப்பி அனுக்கிரஹித்தார்கள் அன்று தினம் இரவு காவால்குடி பிரம்மஸ்ரீ ஸீதா ராமஸ்வாமிகளால் ராதாகல்யாணம் உபன்யாஸிக்கப்பட்டு அஞ்சனேய உத்ஸவமும் கொண்டாடப் பட்டு மஹோத்சவமானது இனிது முடிவு பெற்றது.

டி. வி. நாகராஜ சாஸ்திரி.

ஏகாதசி உபன்யாஸம்.

திருகோடிசுவர க்ஷேத்ரமாசிய திருக்கோடிகாவல் கிருமத்தில் ஸ்ரீ ஜகத்குரு பரமாசார்யாளின் அனுக்ரஹத்தை முன்னிட்டு ஸ்ரீ மடம் முத்திராதிகாரி ஸ்ரீ எஸ். அனந்த நாராயண சாஸ்திரிகள் அவர்களின் தலைமையில் அடியில் கண்ட உபன்யாஸங்கள் நடைபெற்றன.

நிகழும் விக்ரம-ஹு கார்த்திகை-மீ 10உ (25—11—40) ஏகாதசியன்று பக்தி என்னும் விஷயத்தைப்பற்றியும் ஷை கார்த்திகை-மீ 25உ (10—12—40) ஏகாதசியன்று தர்மம் என்பதைப்பற்றியும் இவ்வூர் பிர்மஸ்ரீ மா. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் ஆஸ்திகர்கள் அனைவருக்கும் நன்கு புரியுமாறு அரியபெரிய பிரமாண வசனங்களுடன் உபன்யசித்து அனுக்ரகம் செய்தார்கள்.

நிகழும் மார்கழி-மீ 11உ (25-12-40) ஏகாதசியன்று ஆன்ஹிகம் என்ற விஷயம் தொடங்கி சௌசம் என்பதைப்பற்றியும் ஷை மீ 20உ (30—1—41) சுக்கிரவாரம் தந்ததாவனம் ப்ராதஸ்நானம், இவைகளைப் பற்றியும் ஷை மீ 22உ (5—1—41) பானுவாரம் ஸ்நானபேதம் புண்ட்ரதாரணம் என்பதைப்பற்றியும் ஷை யூரிலிருக்கும் செறுகுடி பிர்மஸ்ரீ ராமமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள் ச்ருதிஸ்ம்ருதி ப்ரமாணவசனங்களுடன் நன்கு உபன்யஸித்தார்.

மேற்கண்ட உபன்யாஸங்களை இவ்வூர் ஆஸ்திக சிகாமணிகள் அனைவரும் வந்திருந்து ச்ரவணம் பண்ணி மகிழ்ந்தார்கள்.

ஆர். நாருயணஸ்வாமி சாஸ்திரியார்.

பார்வதி=கல்யாணம்

(எஸ். கே. விச்வேச்வர சாஸ்திரிகள் மாஜி ஸ்கூல் இன்ஸ்பெக்டர்)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

1. லட்சுமி சற்று நிதானித்து, ஸரஸ்வதி இறப்பதற்கு சிலநாள் முன்னல் "என் குழந்தையைப் பார்த்துக்கோ" என்று சொன்ன வார்த்தை ஞாபகம் வர, "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற பழமொழியை ச நினைத்தும் அப்படியே செய்ய இசைந்தாள். மறு நாள் முதல், கல்யாணம் சங்கர சாஸ்திரி வீட்டிலும், பார்வதி சுந்தரய்யர் வீட்டிலும் வளர்கிருர்கள். தாயற்ற குழந்தை தாயுற்றது போலவும், தாயுள்ள குழந்தை தாயில்லை போலவும் வளர்ந்து வருவது என்ன ஆச்சர்யம். தாமனும் பிதியஸ்ஸூம் போன்ற இவ்விருவர் ஸ்னேகத்தின் பலத்தையல்லவா இது காண்பிக்கிறது? இவர்கள் அன்யோன்யம் எல்லார்க்கும் தெரிந்திருந்ததால் இதைப்பற்றி அதிக வம்பளப்பு ஒன்றுமில்லை. இரு குழந்தைகளும் வேண்டிய போஷாக்குடன், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தார்கள்.

2. அப்போதப்போது நடக்கவேண்டிய சுபகாரியங்கள் எல்லாம் நடந்து வந்தன. ஐந்து வயது வரையிலும் இருவரும் இணை பிரியாத்தோழர்களாய் இருந்து விளையாடி வந்தார்கள். 5 வது வயதில் இருவருக்கும் படிப்பு ஆரம்பமாயிற்று. ஒரே பள்ளிக் கூடத்தில் இருவரும் படித்து தேற்சி பெற்ருர்கள். ரகஸ்யத்தில இப்படி வளர்ந்து வந்தாலும், சுந்தரய்யர் சங்கர சாஸ்திரி, இருவரும் சந்திக்கும்போதெல்லாம் கல்யாணத்திற்கு சுந்தரய்யர் இடமும், பார்வதிக்கு சங்கர சாஸ்திரிகள் இடமும், இயற்கை அன்பு விர்த்தியாய்க்கொண்டே வந்தது. லட்சுமி இரு குழந்தைகளுக்கும் தாய்போல் விளங்கினுள்.

3. கல்யாணம் ஆரம்ப பள்ளிக்கூடம் விட்டுஹைஸ்கூலுக்குமாற்றப்பட்டான்: உபநயனம் இப்போது நடந்தது. பிர்ம்மோபதேசம் (சாஸ்திரிகள் அபத்னீகர் ஆதலால்) சுந்தரய்யர் செய்தார். வகுப்புத்தவருமல் ஏறிக் கொண்டே வந்ததோடு, ஒரு வருஷம் டபிள் பிரமோஷனும் ஆயிற்று கல்யாணத்திற்கு. பார்வதியும் 5 வகுப்பானவுடன், வீட்டிலேயே இருந்து இரு தனி உபாத்யாயர்களிடம், மேல்படிப்பு, சங்கீதம், பயின்று வந்தாள். கல்யாணம் சுந்தரய்யர் வீடு போகும் போதெல்லாம், பார்வதியிடம் பேசிக் களிக்காமல் வரமாட்டான். பார்வதியும் அப்படியே கல்யாணத்தின் வீட்டிற்குப் போகும்போது. வேருெரு சமயம், கல்யாணம் பார்வதியைச்சந்தித்து, பின் வரும் விதம் இருவரும் சம்பாஷித்தார்கள். பார்வதி:— நமக்கு சுமார் 10, 11 வருஷப் பழக்கம்: ஆப்த தோழர்கள் நாமிருவரும்: எனக்கு எங்கேயாவது கல்யாணம் ஆனல் நான் அந்த வீட்டிற்குப் போகவேண்டும்: அப்போது நாமிருவரும் இப்போ போல் பேசமுடியாது: கல்யாணம்:— அதற்கென்ன? அந்தந்த காலத்தில் நடக்க வேண்டியது நடக்கவேண்டியது தானே: நானும் உத்யோகத்தில் எங்கெங்கே அலையவேண்டுமோ, பார் உங்கஅப்பாவை, சிதம்பரத்திற்கு மாற்றி விட்டார்களாம்: ஆமாம், நான் சொல்ல மறந்துவிட்டேன்: வீட்டில் பேசிக் கொண்டார்கள் நேற்று. சௌகரியப்பட்டபோது நாம் ஒருவரை ஒருவர் பார்க்கலாம்: அவ்வளவு தான் என்ருன் கல்யாணம். சங்கர சாஸ்திரிகள் காய்தாவினுல், கல்யாணம் தின அனுஷ்டானங்களைச்சரிவர செய்தல், நல்லொழுக்கம், அடக்கம், பெரியோர்களிடம் வணக்கம், மிருது சம்பாஷணை, வாய்மை, தெய்வ பக்தி இத்யாதி ஒழுக்கங்களால் சிறப்புற்ருன். கொஞ்ச விவரம் தெரியவே சங்கர சாஸ்திரிகள் அந்தஸ்து சாதாரணந்தான்: அதிக பணக்காரர் அல்ல; குணத்தாலும் சாஸ்திர ஞானத்தாலும் மிகக்யாதி பெற்றவர்என்று தெரிந்துகொண்டதோடும், தான் சிரத்தையாய்ப்படித்தால்தான், பணம் சம்பாதித்துத் தனவான் என்ற பெயர் வாங்கலாம் என்று தெரிந்துகொண்டான். அதற்குத்தக்கபடி இன்னும் அதிக ஊக்கத்தோடு படித்துவந்தான். மெட்ரிகுலேஷன் பரீக்ஷை மார்கழி மாதம் நடந்தது. அதில் அந்த ஊரில் உள்ள இரு ஸ்கூல்களுக்குள் முதலாவதாயும் முதல் கிளாஸிலும், இந்த சென்னை ராஜதானிக்குள் பத்தாவது பையனுயும் தேறினுன். புதுவருஷ ஆரம்பத்தில் கஜட்டில் கல்யாணக்தின் பெயர் வந்தது: எப் ஏக்கு சேரப்போகும்போது அங்கே ஒரு போட்டிப் பரிட்சை நடக்கிறது. இஷ்டப்பட்டவர்கள் போகலாம்: முதலாவதானுல் ப்ரின்ஸிபால் ஸ்காலர்ஷிப் வருஷம் 100 ரூபாய் கிடைக்கும் என்று சொல்லிக் கொண்டார்கள். அப்பரிட்சையில் கல்யாணம் முதலாவதாய்த்தேறி 100 [illegible] ஷிப்பு கிடைத்தது.

4. ஆரம்ப முதல் பையன்(கல்யாணம்) சூடிகையைக் கவனித்து வந்த, சில பெண் வீட்டுத் தனவந்தர்கள், சங்கர சாஸ்திரிகளிடம்ஜாதகம் கொடுத்துப் பையன் ஜாதகம் பெற்றுப் போனுர்கள். நல்லவரனுய் அவர்கள் மனதுக்குப் பட்டதால் முலிதல் பொத்திக் கொள்ளவேண்டும் என்றது அவர்கள் எண்ணம். சங்கர சாஸ்திரிகள் ஜாதகம் கொடுப்பதோடு நிறுத்தி, வேறு ஒன்றும் பேசாமல் இருந்தார்.

5. பார்வதி நல்ல அழகும் அழகுக்குத் தகுந்த அடக்கமும், படிப்புத் தேற்சியும், சங்கீத ஞானமும் பொருந்தியவளானுள். படிப்படியாய் வேலையில் உயர்ந்து கொண்டுவரும் சுந்தரய்யருக்கு, மேல் அந்தஸ்தில் உள்ள சிலர், தங்களுக்கு சுந்தரய்யர் சம்பந்தம் கிடைத்தால் நலமாயிருக்கும் என்று ஜாதகம் பெற்றுப் பிள்ளை ஜாதகம் கொடுத்தும் போனுர்கள். பிள்ளை வீட்டார் பொருத்தங்கள் பார்த்துக் கொண்டார்களே யொழிய வேருென்றும் பேச ஆரம்பிக்க வில்லை. சுந்தர்ய்யர் ஸப்கலெக்டராக திண்டுக்கல்லுக்கு மாற்றப்பட்டார். சார்ஜுபெறப் போகும் வழியில், ஊரில் தங்கினுர்; இப்போது சங்கரசாஸ்திரிகளும் அவரும் சந்திக்கையில், கல்யாணத்தின் கல்யாணத்தை உத்தேசித்து பெண் வீட்டார்கள் ஜாதகம் கொடுத்தும் வாங்கியும் போயிருக்கிருர்கள் நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை: பையன் இப்போ உயர்வாய் பாஸ் செய்திருக்கிருனே: அவர்கள் இனி விடமாட்டார்கள் போல் தோன்றுகிறது என்ருர் சங்கரர். உனக்கு மாத்திரம்தான் அப்படி வந்திருக்கிறது என்கிருயோ? என்னைவிடமேல் அந்தஸ்தில் உள்ளவர்கள் பார்வதியை உத்தேசித்துப் பேச்சு விட்டு ஜாதகமும் பெற்றிருக்கிருர்கள். இருக்கட்டும்: நான் சார்ஜ்வாங்கி, ஈஸ்டர் லீவுக்கு வருகிறேன் என்று சொல்லிப் போனுர்.

6. சில நாள் வேலைபார்த்து அந்தலீவுக்கு (Easter) ஊருக்கு வந்தார். வந்ததும் சங்கரரைச் சந்தித்த போது, அப்பா சங்கரா? இந்த ரகஸ்யங்களெல்லாம் எத்தனை நாள்மறைத்து வைத்திருப்பது? ஒரு சமயம் நாளைக்கே வெளிப்படுத்துவேன்: என்ன தோணுமோ. எல்லாத்துக்கும் கல்யாணத்தை நாளைக்காலை ஆகாரத்திற்கு இங்கே அனுப்பு என்ருர்.

7. சுந்தரய்யர் இரவு லட்சுமியுடயி பேசிக்கொண்டிருக்கையில் பார்த்தையாரி பையனை இப்போ ? படிப்பு ஓங்குகிறபு பார் ! அப்போ பயந்தியே நான் நிஜினிஈ படி இப்போ நன்னுகல்லியா ? அவ்வளவு தூரம் பொம்மண்டாட்டிக்கு எங்கே தெரிகிறது ? என்னமோ கல்யாணம், ஊருக்கு ஓசத்தி என்று சொல்லிக்கொண்டார்கள். ஆமாண்டி, இந்த ஊருக்கு ஓசத்தியாய் பாஸ் பண்ணியிருக்கிருன். அதற்காக வருஷம் ஒன்றுக்கு 100 ரூபாயும் கொடுக்கிருர்கள். கல்யாணத்தை நாளைக்காலை ஆகாரத்திற்கே இங்கே வரச்சொல்லியிருக்கிறேன். அவன் ஜாதகத்தையும் பலபேர் வாங்கிப் போயிருக்கிருர்களாம். இன்னும் ஒன்று: பார்வதி ஜாதகத்தையும் என்னைவிட மேல் அந்தஸ்தில் இருப்பவர் சிலர் கேட்டு வாங் [illegible] அதற்கென்ன ? பார்வதி நல்ல குணமுள்ள புத்திசாலிப் பெண்ணுயிற்றே அதனுலேதான், நான் நீ என்று விழுவது: மேற்காரியங்கள் நாளைக்கு என்று இருவரும் நித்திரைக்குப்போனுர்கள்.

8. மறுநாள் ஞாயிறு காலையில் சங்கரர் கல்யாணத்தை சுந்தரய்யர் வீட்டிற்குஅனுப்பினுர். அவன் வரவை சிற்றுண்டி வைத்துக்கொண்டு ஆவலோடு எதிர்பார்த்திருந்த சுந்தரய்யர், அவனைக்கண்டதும் வா கல்யாணம், என்றழைத்து, காலைக்காரியங்கள் ஆகாவிட்டால் கொல்லைப்பக்கம் போய்ச் செய்யவேண்டியதைச் செய்து உடனே இங்கே வா என்ருர்: கிணற்றண்டை வந்த கல்யாணத்தை லட்சுமி ஓடோடியும் வந்து விசாரித்துப்போனுள்.

ஸ்ரீ பிரஹ்மவித்யா விமர்சனீ ஸபை பிரசுரங்கள்.

ஸ்ரீ நகர விமர்சமும் ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னமும்	0—12—0
ஸ்ரீ குரு தத்வ விமர்சம்	0—5—0
ஸ்ரீ வரிவஸ்யா ரஹஸ்யம்	1—0—0
ஸ்ரீ வித்யா ஸபர்யா பத்ததி	2—0—0
ஸ்ரீ வித்யா ஸபர்யா வாஸனை	3—0—0
ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய தத்வம்	1—8—0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனுர்தன அச்சுக் கூடம் லிமிடெட், கும்பகோணம்.

மாவுகளை கொடுத்து குழந்தைகளின் குடலைக்கெடுக்காதீர்கள். தாய்ப்பால்தான் குழந்தைகளுக்குச் சரியான உணவு.

பயஸ்யா (Regd)
தாய்ப்பாலைவிசேஷமாய்வளர்
திவ்ய ரஸாயனம்க்குப்
விலை ரூ. 2—4—0
(Packing& Postge extra)

"ஆத்ரேய"
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ், தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி.
ப்ரோப்ரைடர்: V. B. நடராஜசாஸ்திரீ
ஆயுர்வேதாசார்யா

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopladesikachariar, and S. Kalyanasundaram.